Registered as a NewsPaper

இலவச பிரதி

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, குரும்பூர். T.P:0712-610008 (அ-12762) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-01 | 17-09-2005 | சனிக்கிழமை | ஓசை-212

# தமிழீழத்தில் நடைமுறை அரசொன்று இயங்குவதை நேரில் பார்த்தேன்

## அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

***தமிழீழத்தில் நடைமுறையில் ஒரு அரசு இயங்கிவருவதை நான் நேரில் சென்று பார்த்தேன் என்று அவுஸ்திரேலியாவின் நியூசௌத் வேல்ஸ் மாநில ஸ்ரத்பீல்ட் தொகுதியின் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வேர்ஜினா ஜட்ஜ் தெரிவித்தார். நியூசௌத் வேல்ஸ் மாநில பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.***

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறிலங்கா இப்போது பிரச்சினையில் உள்ளது.அங்கே குடியுரிமை, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. சிறிலங்காவிற்குக் கடந்த வாரம் நான் சென்றிருந்தேன். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிசெய்ய அங்கு சென்றபோதுதான் இதை பார்க்க நேரிட்டது.

ஸ்ரத்பீல்ட் தொகுதியில் உள்ள மூவாயிரம் தமிழர்களிடம் நான் வேண்டுகோள் வைத்து இந்த உதவிகளைப் பெற்றேன்.20 ஆண்டுகால யுத்தத்தினால் இங்கே அகதிகளாக வந்தவர்கள் அவர்கள். அவர்கள் அவுஸ்திரேலியராக இருப்பதில் பெருமிதம் கொள்கிறார்கள். நமது சமூகத்திற்கான பங்களிப்பை அவர்கள் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களது சொந்தத் தாயகம் குறித்தும் தமிழ் மக்கள் குறித்தும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச்சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

சிறிலங்காவில் அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று ஊடகவியலாளரிடம் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா இதை அறிவித்தார். அவசர கால சட்ட நீடிப்பு தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படும் என்றும் அவர் கூறினார்.

## கடற்படையால் இளைஞர் கைது

யாழ். வடமராட்சி கடற்பரப்பில் வைத்து இளைஞர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பொலி கண்டியை அண்டிய கடற்பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவ் இளைஞரையும் அவர் பயணித்த படகினையும் கொண்டு சென்ற கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ அரசுப் பிரகடனத்துக்கான பணிகளில் புலிகள் ஈடுபடுகின்றனர்

### சிறிலங்கா புலனாய்வுத்துறை எச்சரிக்கை

தமிழீழத்தனியரசுப் பிரகடனத்துக்கான பணிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருப்பதாக அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் சிறிலங்கா புலனாய்வுத்துறை அச்சம் தெரிவித்துள்ளது.புலனாய்வுத்துறை அறிக்கையின் விவரம் வருமாறு,

தமிழீழ விடுதலைப் புலிகள் தன்னிச்சையாகவே தமிழீழத் தனியரசுப் பிரகடனத்தை வெளியிடக் கூடும். இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்களின் மீளமைப்புக்கான அரசாங்கத்தின் உதவிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அரசியல் பணி மேற்கொள்ள கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### – வவுனியா வெகுசன அமைப்புக்கள் மகஜர்

(செட்டிகுளம்)

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் வவுனியா வாழ் மக்களிடையே மீண்டும் போர் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் தோன்றியிருப்பதாகவும் இதன் காரணமாக வவுனியாவின் சமூக நிலைக்கு போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வவுனியா போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரிடம் வவுனியா வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரதர் அணியைச் சேர்ந்தவர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(செட்டிகுளம்)

வவுனியாவில் இனம் தெரியாதவர்களினால் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்த நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வவுனியா ஏ-9 சாலையில் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னால் இரவு 9.15 மணியளவில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவர் ஈ.பி.ஆர் எல்.எவ் அணியைச் சேர்ந்த ஆர். லோகநாதன் (வயது45) என்று அடையாளம் கணப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி எம்.சி அபயசிங்க பண்டார தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேலதிக விசாரணையினை மேற் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். ஒன்பது மி.மீற்றர் ரக கைத் துப்பாக்கியால் ஐந்து சூடுகள் சுடப்பட்டிருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## சமாதானத் தீர்வா? யுத்தமா? மக்களே தீர்மானிக்க வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான தீர்வு காணப்பட வேண்டுமா அப்படியல்லாமல் யுத்தம் ஒன்றை மேற்கொண்டு, நாட்டை இரண்டு துண்டாக்குவதா என்பதை எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதான செயற்பாடுகளின் அடிப்படையான பலவற்றிற்கு சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்தொருமிப்புக் காணப்பட்டதாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனை நினைவுகூர்ந்து இரண்டாம் நாளாக எழுச்சி நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

தியாகதீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று எழுச்சி பூர்வமாக நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச வளாகத்தில் காலை நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அழகக சங்கப் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் கலந்துகொண்டனர்.

பொது ஈகச் சுடரேற்றலினைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை கிளிமாவட்ட சுகாதார சேவைப் பொறுப்பாளர் காந்தா ஏற்றிவைக்க, நினைவுக் கருத்துரைகள் இடம்பெற்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய போருக்கான எழுச்சி மாநாடு கிளி.யில்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய போருக்கான எழுச்சி மாநாடு எதிர்வரும் 20.09.2005 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. பத்து மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள், மக்கள், அமைப்புக்களின் பேராளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள் அனைவரையும் இவ்வெழுச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (கோ)

**விடுதலைப் புலிகள் வாழ வேண்டுமென்றோ ஆள வேண்டுமென்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் அனைவரும் மரணிக்கவும் தயாராகவும் உள்ளோம்.**

**— தியாகி லெப்.கேணல் திலீபன்**



## சாவு அறிவித்தல்

### முருகேசு இரத்தினம்

வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், பத்திமா கோவிலடி பண்டத்தரிப்பை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இரத்தினம் 16-09-2005 நேற்று (வெள்ளிக்கிழமை) காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு, செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரராசா (திருகோணமலை), ரவிசங்கர் (போராளி லலித்), பரமேஸ்வரன் (மாவீரர் அன்ரன்), கோபாலினி (சுவிஸ்), பாலகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-09-2005 (நாளை) ஞாயிற்றுக்கிழமை அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு பொதுமயானத்தில் தனகம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

த.மு.
இல. 99, குடிமத்தி,
உருத்திரபுரம். (6718)

தகவல்:
**பிள்ளைகள்.**

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மதியழகன் என்பவரது அடையாள அட்டை, அனுமதி பட்டை 14.09.2005. தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு. ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.
.தகவல்.மதியழகன். (5612)

## கட்டடத் திறப்புவிழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட இருமாடிக் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கார்ப் திட்டத்தின் மூலம் மேற்படி இருமாடிக் கட்டடம் அமைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## நீங்காத நினைவலையில் ஓராண்டு



அமரர் இராசையா தியாகலிங்கம்
(கிராம அலுவலர் உருத்திரபுரம் மேற்கு, கிளிநொச்சி)

மலர்வு:-03-09-1953 உதிர்வு28-09-2004

### திதி பூரணை 17. 09. 2005

*அன்பே உருவான பாசத்தின் உறைவிடமான*
*எமது அன்புத் தெய்வமே.தந்தையே*
*அன்புமழை பொழிந்து அரவணைத்த அன்புருவே*
*உங்கள் இனிய முகம் காணாது தவிக்கின்றோம்.*
*ஆண்டுகள் ஒன்று ஆனதப்பா*
*கலையாத நினைவுகளுடன் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து*
*உங்கள் ஆத்மாசாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி பிள்ளைகள்
(சி.12855)

## ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



இறப்பு 19 - 08 - 2005

பிறப்பு 28 - 02 - 1937

**தம்பியையா சுப்பிரமணியம்**
**உடுத்துறை வடக்கு**
**தாளையடி**

*விழி காக்கும் இமைபோல-எமைக்*
*காத்த தந்தையே*
*நாம் எங்கு சென்ற போதும்*
*உடன் கூட வந்தீர்களே-ஆனால்*
*பூரி எமைத் தாங்க மறந்த போதும்*
*உங்கள் அன்பு எமைத் தாங்குமென நினைக்க*
*விதிவிட்ட பாதையில் நீங்கள்*
*மட்டும் தடம்மாறிப்போனதென்ன*
*நெஞ்சு விம்மி அழுகின்றோம்*
*எமக்கு அன்புசெய்ய யாருண்டு*
*ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!*

*17.09.2005(நாளை) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியை களிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர் நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் வேண்டுகின்றோம்.*

*தகவல்,*
*அந்தரத்திலவி* (சி.6717) *உடுத்துறை வடக்கு,*
*தாளையடி.*



# அமெரிக்கா பயங்கரவாத அரசாங்கம்; ஐ.நா.சபையில் வெனிசுலா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

**ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அமர்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய வெனிசுலா நாட்டுத்தலைவர் அமெரிக்கவையும், ஐக்கிய நாடுகள்சபையையும் கடுமையாக விமர்சித்ததுடன் அமெரிக்காவை பயங்கரவாத அரசாங்கம் என தெரிவித்துள்ளார்.**

ஐ.நா..அமர்வின் இறுதி ஆவணத்தையும் அவர் கடுமையாக விமர்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வறுமையை ஒழிப்பதற்காகவும் சூழலைப் பாதுகாப்பதற்காகவும் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டுமென உலக நாடுகளிடம் வெனிசுலா சனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்முறை அமர்வின் போது வெனிசுலா சனாதிபதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் முடிவடைந்ததால் அவரது உரையை நிறுத்துமாறு ஐக்கியநாடுகள் சபை அதிகாரிகள் அவரை வற்புறுத்தியபோதும் சாவேஸ் தொடர்ந்து உரையாற்றினார்.

தனது உரையை நிறுத்திய சனாதிபதி சாவேஸ் பொதுச்சபை அமர்வில் உரையாற்றிய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபியள்யூ புஷ் அவருக்கு வழங்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலான நேரத்தை எடுத்துக் கொண்டதாகவும் சுட்டிக்காட்டினார். இதனால் தனது உரையைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இடமளிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

## தேர்தலில் பெண்கள் போட்டியிட சவுதியில் முதல் முறையாக அனுமதி

(ரியாத்)

சவுதியரேபியாவின் வரலாற்றில் முதல்முறையாகப் பெண்கள் தேர்தலில் போட்டியிட உள்ளனர். உள்நாட்டு வர்த்தக மற்றும் தொழில்துறை சட்டசபைத் தேர்தலில் முதன்முறையாக பெண் வர்த்தகர்கள் போட்டியிட உள்ளனர். இந்தச் சபையில் நாற்பதாயிரம் உறுப்பினர்களில் பெண்கள் 10 சதவீதத்திற்கு குறைவாகவே உள்ளனர். தேர்தல் தொடங்குமுன் மேலும் பலர் போட்டியிடக் கூடும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

சவுதிஅரேபியாவில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தீவிரமாக கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.



அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடை பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது மாநாட்டுக்கு சென்றுள்ள உலகத் தலைவர்களைப் படத்தில் காணலாம்.

## அணுசக்தித் திட்டம் தொடர்பாக ஈரான் ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சு

(லண்டன்)

தெஹ்ரானின் அணுசக்தித் திட்டங்கள் பற்றி ஈரானின் சனாதிபதி மூன்று ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சமீபத் தில் தாம் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட தன் பின்னர் முகமூட் அகமட்நியாத் இந்த விடயம் குறித்து ஐரோப்பிய ராஜதந்திரிகளுடன் கலந்துரையாடியது இதுவே முதற் தடவையாகும்.

பிரித்தானியா, பிரான்ஸ், மற்றும் ஜேர்மன் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையே சனாதிபதி இவ்வாறு சந்தித்துள்ளார்.

ஈரானிய சனாதிபதி ஏற்கனவே அணுசக்தி ரகசியங்களை சினேக பூர்வமாக பங்கிட்டுக் கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிடையில் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் ஈரானிய அணுசக்தித் திட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் குற்றச் சாட்டுக்களை மறுப்பதாகவும் இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து பாதுகாப்பு சபைக்கு எடுத்துக் கொள்வதே தமது நோக்கமென்றும் கூறியுள்ளார்.

## முப்பது வருடங்களின் பின்னர் நாளை ஆப்கானிஸ்தானில் தேர்தல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நாளை பாராளுமன்ற மற்றும் மாகாணத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

தேர்தல் பிரச்சாரப்பணிகள் நேற்றுக்காலையுடன் நிறுத் தப்பட்டுள்ளன.

முப்பது ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறும் தேர்தலுக்கு பிரச்சாரம் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். கட்சிசார்பில்லாத முறையில் தேர்தல் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு வேட்பாளர்களும் சுயேட்சையாகவே போட்டியிடுகின்றனர் மாற்றமுடியாத ஒற்றை வாக்கு முறையில் தேர்தல் நடப்பதால் ஒவ்வொரு வாக்காளரும் ஒரு வேட்பாளரையே தேர்ந்தெடுக்க முடியும்.

குறிப்பாக தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வேட்பாளர்களுக்கெதிரான அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் அதிகரித்திருந்தன.

பாராளுமன்றத்தின் கீழ்ச் சபைக்கு 2770 வேட்பாளர்களும் மாகாண சபைக்கு 3020 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

நேற்று முன்தினம் அங்கு தேர்தல் வேட் பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டதனை அடுத்து அங்கு கலவரம் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.



ஆப்கானிஸ்தானில் தேர்தல் வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல் லப்பட்டதை யடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள தை படங்களில் காணலாம்.

## இந்தோனேஷியாவில் பறவைக்காய்ச்சல்; நான்கு பேர் பலி; மேலும் பரவும் அபாயம்

(லண்டன்)

இந்.தோனேஷியாவில் பறவைக்காய்ச்சல் நோய் தீவிரமாகப்பரவி வருகின்றது. இந் நோய்க்கு இலக்காகி இதுவரை நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

கோழிப்பண்ணைக்கு அருகில் வசித்து வந்த பெண்ணொருவரும் இந்த நோய்க்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

இங்கு பரவி இருக்கும் பறவைக்காய்ச்சல் நோய் மேலும் தீவிரமடையக்கூடும் என்றும், இதனைக்கட்டுப்படுத்த உலக நாடுகள் உதவி செய்ய வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஆசிய நாடுகளில் பறவைக்காய்ச்சல் பரவியதன் காரணமாக 64 பேர் பலியாகி இருந்தமை தெரிந்ததே.

## ஈராக்கில் தற்கொலை படைத்தாக்குதல்; 24 பொலிசார் கொல்லப்பட்டனர்

(பாக்தாத்)

ஈராக்கில் நடைபெற்ற தற்கொலைப் படை தாக்குதலில் 24 பொலிசார் பலியாகியுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேனின் ஆதரவாளர்களான சன்னி பிரிவு முஸ்லிம்களும் அல்-ஹைதா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புக்களும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆட்சியில் இருக்கும் ஷியா பிரிவினருக்கும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் குர்திஷ்களுக்கும் அமெரிக்கப் படைக்கும் எதிராக வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந் நிலையில் தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே உள்ள தௌரா பகுதியில் நடைபெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் இந்த 24 பொலிசாரும் கொல்லப்பட்டனர்.

## சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் கட்டியெழுப்பப்படும் — புஷ்

(வோஷிங்டன்)

கற்றினா சூறாவளியினால் முற்றாகப் பாதிப்படைந்த அமெரிக்க வளைகுடாப்பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்ப தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமது அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக சனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார்.

இப்புனரமைப்பு நடவடிக்கைக்கு பல பில்லியன் டொலர்களைச் செலவிட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நான்காவது தடவையாகவும் நியூஓர்லியன்ஸ் நகரிற்கு விஜயம் செய்த போது புஷ் இதனைக் கூறியுள்ளார். வெறிச்சோடியிருக்கும் நியூஓர்லியன்ஸ் நகரில் கூடியிருந்த பல இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றிய புஷ் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நகரை கட்டியெழுப்ப தான் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார்.

## பட்டாசு ஆலையில் தீ விபத்து; 34 பேர் உடல் கருகிப் பலி; 50 பேர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவில் பீகாரில் இரண்டு பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் 34 பேர் உடல் கருகிப் பலியாகினர். 50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம் பெற்றது. திடீரென ஆலையில் பட்டாசு வெடிப்பு ஏற்பட்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இரண்டு பட்டாசு ஆலைகளும் தரை மட்டமாகின. உடனடியாக தீயணைப்புப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு தீயணைப்புப் படையினர் இரு மணி நேரம் போராடியேய தீயை கட்டுப்பாட்டுக் கொண்டு வந்தனர்.

ஆலைப் பகுதிக்குச் செல்லும் பாதை குறுகியதாக காணப்பட்டதால் தீயணைப்பு வண்டிகள் சென்று பணியில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டதால் தீயணைப்புப் பணிகள் தாமதடைந்தன.

பட்டாசு தீப்பிடித்து எரிந்த போது அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர் பணியில் இருந்தனர். இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பில் 2005ஆம் ஆண்டிற்கான அறிவுச்சமர்



தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பில் சிகரம் நிறுவனத்தின் ஆதரவுடன் "அறிவுச் சமர் 2005'' நிகழ்ச்சி தாயகப் பகுதியில் இடம்பெற்று வருகின்றது. வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலை அணிகளுக்கு இடையில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அறிவுச்சமர் நிகழ்ச்சியில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈகச்சுடரை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்கு மரன் ஏற்றி வைத்தார். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் சிறப்புரையினை நிகழ்த்தினார்.

கனகராஜன்குளம் மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம், கிளி/இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இடையில் போட்டிகள் இடம்பெற்றன.

அத்துடன் சுவிஸிலும் தாயகத்திலும் உள்ள தமிழ் தொலைக்காட்சி வலையமைப்பினர் இணைந்து நடத்தும் நிருத்திய சங்கமம் என்னும் பரத நாட்டிய போட்டி நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

# சிறுவர் இல்லப்பராமரிப்பு பணியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் கூடிய நிர்வாக அனுசரணையில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களினது இயக்குனர்கள். பணியாளர்களுக்கான பல்துறைசார் பயிற்சிப்பட்டறை நிகழ்வு ஒன்று கடந்த 12ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை "குருகுலம்'' சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

சிறுவர் இல்லங்களின் புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான பணிப்பாளர் இராசுஇரவி தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக தென்னாபிரிக்காவிலிருந்து தாயகத்திற்கு வருகைதந்துள்ள திருமதி.வள்ளி (தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்), கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் சுரேஸ்குமார், முன்னைநாள் யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரைவுரையாளரான ஆதவன் ஆகியோர் அந்தந்தத்துறைசார்ந்த விரிவுரைகளை நிகழ்த்தியிருந்தனர்.

புனிதபூமி சிறுவர் இல்லம்,பாரதி சிறுவர் இல்லம், இனியவாழ்வு சிறுவர் இல்லம், காந்தி சிறுவர் இல்லம், "குருகுலம்'' சிறுவர் இல்லங்களென ஐந்து சிறுவர் இல்லங்களைச் சார்ந்த 50இற்கும் மேற்பட்ட பயனாளிகள் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். இறுதிநாளான கடந்த புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் பயனாளிகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

# வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்குப் பிரதேச செயல் பிரிவிற்குட்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 4.30 மணிவரை நெடுங்கேணியிலுள்ள பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் மக்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளான பிறப்பு, இறப்பு,திருமணப் பதிவு. ஆட்பதிவு, நீர்ப்பாசனம், விவசாயம், வீதிகள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், கல்வி, சுகாதாரம், காணி விடையமான இலாகா, உள்ளூராட்சி, கூட்டுறவு, வாகனப்பதிவுகள் ஆகியவற்றிக்குத் தீர்வு காணப்படவுள்ளது. இந்நடமாடும் சேவையில் சகல திணைக்களத்தலைவர்களும் வருகை தரவுள்ளதால் பயன்பெற விரும்பும் அனைத்துப் பொதுமக்களையும் சமுகமளிக்குமாறு வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க. பரந்தாமன் கேட்டுள்ளார். (10)

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகளை நடைமுறைப்படுத்தும் வேகம் அதிகரிக்கப்படவேண்டும்

## திருமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளின் வேகம் அதிகரிக்கப்பட வேண்டுமென திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் சமூக மேம்பாட்டுத்திட்டங்களைச் செயற்படுத்திவரும் சர்வதேச மற்றும் உள்நாட்டு தன்னார்வ அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் கிழக்கு -கணேசபுரம் மத்திய கல்லூரியில் நடைபெற்றுள்ளது.நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் யுத்தம் மற்றும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக மேற்கொள்ளப்படும் சமூக மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு பணிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் வேகம் அதிகரிக்கப்படவேண்டும்.'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட துணை அரசியல்துறைப்பொறுப்பாளர் செம்மணன் கருத்துரைக்கையில், மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேசசெயலர் பிரிவுக்கிராமங்களிலும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிகக்குடியிருப்புக்களை அமைத்துக்கொடுக்கும் வேலைகள், அவை தொடர்பான வேலைத் திட்டங்களுக்குத்தேவையான கட்டடப்பொருட்கள், சீமெந்து முதலியவற்றைக்கொண்டு செல்வதற்கு இராணுவத்தினர் விதித்துள்ள தடை மற்றும் கட்டுப்பாடு, நெருக்கடிகளால் தாமதமாகியுள்ளன என்று தெரிவித்தார். இச்சந்திப்பில் முப்பதிற்கும் மேற்பட்ட சர்வதேச,தேசிய உள்ளூர் தன்னார்வ அமைப்பின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். (25)

# சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தில் சுழற்சி முறை நுண் கடன் வழங்கும் நிகழ்வு

போரினால் மிகவும் மோசமான நிலையில் கடந்த 15 வருடகாலமாக பாதிப்புற்றிருந்த திருகோணமலை மாவட்டத்தின் கன்னியா கிராமத்தில் சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட (NECORD) நிறுவன நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்கில் சுழற்சிமுறை அடிப்படையில் மூன்றாம் கட்ட நுண் கடன் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட அலுவலர் விஜயகுமார் தலைமையில் கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உதவிப்பணிப்பாளர் சி.குமரகுருபரனும், சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட நிறுவனத்தின் சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட அலுவலர் சுரேசும் சமூகபொருளாதார அபிவிருத்திச்சங் கத்தலைவர், சமூக வலுவூட்டாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதல் இரண்டு கட்டங்களாக நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா (440,000/=) நுண்கடன் இககன்னியா கிராம மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையும், மூன்றாம்கட்டமாக அன்று நான்கு இலட்சத்து எழுபத்தியிரண்டாயிரம் (472,000/=) ரூபா நுண்கடன் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடததக்கது.

# வட்டக்கச்சி ம.வி.யின் உயர்தரப் பரீட்சை முடிவு

(வட்டக்கச்சி)

கிளி.வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் திறமைச்சித்தி எய்தியுள்ள சில மாணவர்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கணிதப்பிரிவில்:-

ம.ரூபவண்ணன்-A,2B, மாவட்டநிலை 01

சி.சிவந்தினி-B,2C (மாவட்டநிலை 07)

வணிகப்பிரிவில்:-

ஜெ.மேனகா-2B,C,ஞா.கஸ்தூரி-2B,C

கலைப்பிரிவு:-

கோ.விஜயகீதா 2A,B (மாவட்ட நிலை 6), பொ.ஜோதி A,2B,வ.தனரூபி-A,B,C,ஜெ.ஜெயவிஜிதா-A,B,C, பு.மயூரதனி-A,B,C (12)

# நவீன சத்திரசிகிச்சைக்கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் அமைக்கப்படவிருக்கும் நவீன வசதி



களை உள்ளடக்கிய சத்திரசிகிச்சை கூடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு அம்மருத்துவமனையின் நிர்வாகப் பணிப்பாளர் பாரதன் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு இடம் பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை வைத்திய கலாநிதி கெங்காதரன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மருத்துவப்பிரிவுப்பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். மங்கலவிளக்கினை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரி சிவபாலன், வெளிநாட்டிலிருந்து வருகைதந்திருந்த எக்ஸ் கதிர் தொழில்நுட்பவியலாளர் சுந்தரலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். இதனைத்தொடர்ந்து அமெரிக்காவிலிருந்து வருகைதந்திருந்த இதய மருத்துவநிபுணர் சன் சுந்தர் சத்திரசிகிச்சைக்கூடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மனோஜ் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வரவேற்புரையினை வைத்திய கலாநிதி சிவபாலன் வழங்கினார். சிறப்புரையினை வைத்திய கலாநிதி கெங்காதரன், மற்றும் அமெரிக்காவிலிருந்து வருகைதந்திருந்த வைத்தியர் சன் சுந்தர், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் நிர்வாகப்பணிப்பாளர் பாரதனின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

# திலீபன் மருத்துவ சேவையினரால் நயினாமடுவில் நடமாடும் சிறப்பு மருத்துவ சேவை

(வவுனியா)

திலீபன் மருத்துவசேவையினரால் கடந்த புதன்கிழமை அன்று நயினாமடுப்பகுதியில் நடமாடும் சிறப்பு மருத்துவசேவை நடாத்தப்பட்டது. நிகழ்வில் பொதுச்சுடரை வவுனியா மாவட்ட தமிழீழ சுகாதார பொறுப்பாளர் ஈழச்செல்வன் ஏற்றினார். தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கண்காட்சி நிகழ்வினை மருத்துவ ஆலோசகர் எழுமதி கரிகாலன் ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து, நோயாளர்களிற்கான பொது மருத்துவமும், குழந்தை மருத்துவமும், பற்சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. இதில் 400 இற்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

## புதிய கட்டடத்திறப்பு விழா

வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் புதியகட்டடத்திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நெடுங்கேணியில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு அவசர புனரமைப்புத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இப்பிரதேச செயலக திறப்புவிழா நிகழ்வு பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான ச.கனகரட்னம், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (பி)

# விவேகானந்த நகரில் வீடு தீக்கிரை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி விவேகானந்த நகரில் கடந்த புதன்கிழமையன்று இரவு வீடொன்றில் தீப்பிடித்ததன் விளைவாக வீட்டிலிருந்த பணம் உட்பட அனைத்து உடமைகளும் எரிந்து சாம்பராகியுள்ளன.

சம்பவதினம் அன்று வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் அயலில் நடைபெற்ற கொண்டாட்டா நிகழ்விற்கு சென்றிருந்த வேளையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக வீடு முற்றாக எரிந்து சாம்பராகியதுடன், வீட்டில் இருந்த 35,000 ரூபா பணம் மற்றும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வீட்டுப்பொருட்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரியக்கிடைத்துள்ளது.

விவேகானந்த நகரைச் சேர்ந்த ஆ.கபிரியல் என்பவரது வீடே தீப்பிடித்து எரிந்துள்ளமை குறிப்பிடப்பட்டது. (சோ)

# தமிழர் தாயகப்பகுதியில் பொதுச் சுகாதாரம் பேணல்

சுற்றுச்சூழலை சுத்தமாகவும், நிலத்தடிநீரைப் பாதுகாப்பாகவும் பேணுவதனை நோக்கமாகக் கொண்டு பெருமளவு மக்கள் செறிவாக வாழும் நகர்ப்புறங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுநீரையும், மலசலகூடக் கழிவுகளையும் முறையான கிருமியளிப்புத் தொட்டியினூடாக (Septic Pit) சிகிச்சையளிக்கவும், கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறியளவில் வெளியேறும் கழிவுநீர் மற்றும் மலக்கழிவுகளைப் பாதுகாப்பாக உறிஞ்சுகுழி (Soakge Pit) அமைத்தும் சுகாதாரத்தைப் பேணவேண்டுமெனசகலரையும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகளும் இத்தீர்மானத்தை ஏற்றுநடக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் இனி வரும் காலங்களில் கட்டடங்கள், நிறுவனங்களுக்கான அனுமதி வழங்கும் போது மேற்படி விடயத்தைக் கருத்தில் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்டவர்களை சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

# குடாநாட்டில் "பொங்கு தமிழ் 2005" எழுச்சி நிகழ்வுக்கு ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

**தமிழினத்தின் அதியுயர் இலட்சியமாகிய விடுதலையின் முக்கியத்துவத்தை சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டவும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பலம்சேர்க்கும் வகையிலும் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் முன்வைக்கப் படவிருக்கும். பொங்கு தமிழ் 2005 எழுச்சிப் பிரகடனத்திற்கு பாரிய அளவில் யாழ். குடாநாட்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.**

இது தொடர்பாக நேற்று முன்தினம் இடம் பெற்ற தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொழிற்சங்க கலந்துரையாடலில் தென்மராட்சி கிராமஅலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் இணைந்து பல உடனடி முடிவுகள் எடுக்கப்பட்டு செயற்படுத் தப்பட்டு வருகின்றன.

இதேவேளை சங்கானை ப.நோ. கூட்டுறவு சங்க ஊழியர்களின் கலந்துரையாடல், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் என்பன நேற்று முன்தினம் இடம் பெற்றன.

இதேவேளை பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பீடாதிபதிகள், துணை வேந்தர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டபலர் கலந்து கொண்டு பொங்கு தமிழுக்கான ஏற் பாடுகளுக்கான ஆலோசனைகளை முன் வைத்தனர்.

பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனம் 2005 தொடர்பாக யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிவிப்பில்,

எமது உரிமைகளை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டி மீண்டும் ஒரு பொங்கு தமிழாய் உருவெடுத்துள்ளது எமது மாணவர் சமூகம். உங்களைச் சந்திக்க உங்கள் பிரதேசங்கள் தோறும் உங்கள் வீடுகள் தோறும் அணி அணியாக எமது மாணவர்கள் வருகை தரவுள்ளார்கள் இன்முகத்தோடு அவர்களை வரவேற்று அவர்கள் கூறும் கருத்துக்களை அன்புடன் செவிமடுத்து எழுச்சிப் பிரகடனத் திற்கு பலம் சேர்க்கும் வகையில் நீங்களும் எம்முடன் இணைந்து 30 ஆம் திகதி ஒருமித்த குரலாகி எமது கோரிக்கையை பல்கலை மைதானத்தில் சர்வதேசத்தை நோக்கி அனைவரும் வான்முழுங்க குரல் கொடுப்போம் அனைவரும் தயாராகுங்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய பீடமாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிவிப்பில்,

யாழ் பல்கலை சமூகம் யாழ்.குடாநாட்டில் நடாத்தும் பொங்கு தமிழ் நிகழ்விற்கு விவசாய பீட மாணவர் ஒன்றியம் தனது முழுமையான ஆதரவை வழங்குகிறது.

எம் மக்களின் உள்ளக்கிடக்கையை சர்வதேச உலகிற்கு உரத்துக் கூற நாம் அனைவரும் ஒன்று திரள்வோம் யாழ் பல்கலைக்கழக சமூகம் நடாத்தும் பொங்கு தமிழ் நிகழ்விற்கு அனைத்து மக்களும் அணி திரண்டு வந்து எமது ஒற்றுமையை சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

காலம் காலமாக எமது மக்களின் அடிமன தில் புதைந்து கனன்று கொண்டிருக்கும் எமது உரிமைக் குரலை உலகிற்கு உரத்துக் கூறுவோம்.

வவுனியாவில் மேற்கொண்ட பிரகடனத் திற்கு வலுச்சேர்க்கும் முகமாக எமது நீண்ட நாள் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக் கையை உறுதிப்படுத்தும் விதமாக அனை வரும் அணி திரள்வோம் என தெரிவிக் கப்பட்டது. (37,33)

## வெடிவைத்து மீன் பிடிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் டைனமைற் வெடி வைத்து மீன்பிடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டிருப்பதாகவும் இத்தடையினையும் மீறி தொழிலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இவ்வாறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரது தொழில் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது கடற்றொழில் அடையாள அட்டையும் பறி முதல் செய்யப்படும்.

கடல் வளம் மாசுறுவதுடன் மீன் இன விருத்திக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அச்சமாசம் மேலும் தெரிவித்துள்ளது. (28)

## புனரமைக்கப்படுமா?

சுண்டுக்குழி தபால் அலுவலகமும். தபாலதிபர் விடுதியும் புனரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையில் காணப்படு கின்றது. சேதமடைந்துள்ள இந்த அலுவல கத்தினையும், விடுதியினையும் மாரி காலத் தில் பயன்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது.

இதே நிலையிலேயே இவை காணப்படின் எதிர்வரும் மாரிகாலத்தில் இதன் சேவைகளைப்பெறுவதில் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் .இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையென பாதிக்கப்பட்டோரால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## "பொங்குதமிழ் -2005" இற்கு அணிதிரட்ட நாளை பல்கலைக்கழகத்தில் எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இலட்சக்கணக் கான தமிழ் மக்கள் அணிதிரண்டு நடத்தவுள்ள "பொங்குதமிழ் -2005" இற்கு பெண்களின் அணிதிரள்வை எடுத்துரைக்கும் எழுச்சி நிகழ்வு ஒன்று நாளை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்-பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்- பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் "பொங்குதமிழ்- 2005"இற்கு ஆதரவாகவும் அதற்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொங்குதமிழ் எழுச்சிக்கான "பெண்கள் அணிதிரள்வு" என்ற தலைப்பில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் ஈமார் ஆயிரம் பெண்களை அணிதிரட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் கூறினர். (33)

## இடிந்து விழும் நிலையில் குறிகட்டுவான் பாலம்

யாழ்- தீவகத்தில் உள்ள குறிகாட்டுவான் பாலம் மோசமானநிலையில் சேதமடைந் துள்ளதால் அது எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயம் உள்ளது என்று வீதி அபிவி ருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர்.

வேலணையில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறைக்குச்செல்லும் வீதியில் இருக்கும் மேற்படிபாலம் சேதமடைந்திருப்பதால் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு செல்லும் பயணிகள் பாலமூடாக பயணிக்கும் போது விழிப்புடன் செயற்படுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

இப்பாலமூடாகப்பயணிக்கும் மக்களது பாதுகாப்பை கவனத்தில் கொண்டு இப்பாலத் தின் சேதமடைந்த பகுதிகளைப்புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்- மாவட்ட பிரதம பொறியியலாளர்- வி.சுதாகர் தெரிவித்துள்ளார்.

இப்பாலத்தைப் புனரமைப்பதற்கான நிதியுதவியை தாம் யாழ். அரச செயலகத்திடம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (33)

## வீரசிங்கம் மண்டபத்தில் புதன்கிழமை குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா

(நமது நிருபர்)

குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு விழா எதிர்வரும் புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு இந் நிகழ்வு இடம் பெறும். இதற்கான ஏற்பாடுகளை யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் மேற்கொண்டுள்ளதாக வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக பொது மக்களுக்கு விழிப் பூட்டும் நடவடிக்கைளிலும் இரத்த வங்கிப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்;

இரத்ததானத்தின்முன் இரத்தம் வழங்கு வதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நோய்கள் இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும். பின்னர் நாடித்துடிப்பு, குருதி அழுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும் குருதிக் கொடையாளர்களின் உடல் நிறையும், குருதிச்செறியும் அளக்கப் படும் உணவு, நீராகாரம் உட்கொண்ட விபரம் கேட்டு அறியப்படும். உடலிலுள்ள குரு தியில் பத்து வீத குருதியே பெற்று கொள்ளப் படும். குருதி வழங்கலின் பின்னர் சிறிது நேர ஓய்வும் நீர் ஆகாரமும் வழங்கப்படும். குருதி வழங்கலுக்கு பின்னர் கடைப்பிடிக்க வேண்டி யவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

சடுதியான பெருமளவான குருதிப் பெருக்கினால் உயிர்பிரிவதை இரத்தம் ஏற்றி தடுக்கலாம். குருதி உறையா நோய் குருதி சோகை, டெங்குக் காய்ச்சல் போன்றவற்றுக்கு குருதியை பல கூறுகளாக பிரித்து ஏற்றி பலின் வாழ்வை நீடிக்கலாம். வளமாக்கலாம் வலிமை மிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு புற்று நோயாளரின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்த கூறுகளை ஏற்றி வாழ்வை நீடிக்கலாம். பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள்காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்றப்படலாம்.

இரத்ததானம் வழங்குவதால் உடலின்நிறை குருதி செறிவு அறியப் படுகின்றது. உடல் நிலை (நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகின் றது. குருதிவகை முன் கூட்டியே அறியப்படுகின் றது. குடும்ப அங்கத்தவர், நண்பர்களின் குருதித் தேவைக்கு உதவ முடிகின்றது. வைத்திய சாலை யுடனான உறவு நெருக்கமாகின்றது. ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. குடும்ப சமூக பொறுப்பு ணர்வு அதிகரிக்கின்றது என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (செ)

## புதிய கட்டடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் .பண்ணைப் பகுதியில் இரண்டு திணைக்களங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தற்காலிக கட்டடங்களில் இயங்கி வரும் மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கும், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கும், இப்பகுதியில் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் இதில் மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கான கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையில் தரம் 1ஐ உடையவர்கள் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்தை உடைய வர்கள் இப்ப தவிக்கு விண்ணப்பிக் கலாம.இப் பதவிக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக வடமராட்சி வலயக்கல்வி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். என்று வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வராஜா அறிவித்துள்ளார். (33)

## மின்சார வசதியற்ற 30 கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் பின் தங்கிய நிலையில் மின்சார, வசதிகள் இன்றிக்காணப்படும் 30 கிராமங்களுக்கு மின்சாரவசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு, நிகொட் திட்டத்தின்கீழ்- இலங்கை மின்சாரசபைக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நிகொட் திட்டத்தின் கீழ் முன்னெடுக் கப்பட்டு வரும் கிராம அபிவிருத்தித் திட்டத்தின ஓர் அங்கமாகவே இம் 30 கிராமங்களுக்கும் மின்சாரவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்ப தற்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக 26.5 மில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்கு நிகொட் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

இந் நிதியிலிருந்து கோப்பாய், தெல்லிப் பழை, தென்மராட்சி,கரவெட்டி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 30 கிராமங் களுக்கு மின் விநியோகம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## யாழ்., வன்னி ஆசிரியர் அரச ஊழியர்களிடம் ஆதரவுகோரி மகிந்த ராஜபக்ஷ கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தேர்தல் நடவடிக்கை களில் சிங்கள பெரும்பான்மை கட்சிகள் தற்பொழுது தீவிரம் காட்டிவருவதாக தெரிய வருகிறது.ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்க சுதந்திர கட்சியினுடைய தேர்தல் சுவரொட்டி கள், வடமராட்சி, தென்மராட்சி யாழ்நகரப்பகு திகளில் ஒட்டும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.படையினரின் பாது காப்புடன் கொழும் பில் இருந்து வந்திருக்கும் இருகட்சியினரின் ஆதரவாளர்களால் இவை ஒட்டப்பட்டு வருகின்றன இதேவேளை யாழ் குடா நாட்டிலும், வன்னியிலுமுள்ள அரச செயலகங் கள்,பாடசாலைகள். முக்கியபிரமுகர்களுக்கு பிரதமர் மகிந்தராஜ பக்ஷவினால் கையெழுத் திட்டுஆதரவுகோரும் கடிதங்கள்அனுப்பிவைக்கப் பட்டு இருப்பதாகத் தெரிய வருகிறது. (28)

## மந்திகை வைத்தியசாலையில் சட்ட வைத்திய நிபுணர் இல்லை

யாழ் மந்திகை வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கென சட்டவைத்திய நிபுணர் எவரும் நியமிக்கப்படாததினால் மரணவிசாரணைகளை மேற்கொள்வதில் பெரும் இடர்பாடு களைச்சந்திக்க நேரிடுவ தாக இவ்வைத்தி யசாலையின் பொறுப் பதிகாரி கதிரவேற்பிள்ளை கூறியுள்ளார்.


இவ்வைத்தியசாலையில் சட்ட வைத்திய நிபுணர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாகவே இருந்து வருகிறது. இதனால் இவ்வைத்தியசாலை நிர்வாகம் மரண விசாரணைச் செயற்பாடுகளின்போது எதிர்கொள்ளும் பலவிதமான இடர்பாடு களையும் சுட்டிக்காட்டி இங்கு ஓர் சட்ட வைத்திய நிபுணரை நியமிக்கக் கோரியும் அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. இதனால் இவ்வைத்தி யசாலையின் மாவட்ட வைத்தியஅதிகாரியே மரணவிசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மரணவிசாரணை களின்போது காலதாமதங்கள் ஏற்படுவ தாகவும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கதிரவேற்பிள்ளை கூறினார். (33)

# யானைக்கால் நோய்

யானைக்கால் நோய் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, தென்னமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் மக்களில் சிலரிடம் காணப்படுகின்றது. இந்நோய் பரவியுள்ள நாடுகளை நோக்கும் போது கரையோரப்பிரதேசங்களிலிருந்தே ஏனைய பிரதேசங்களுக்குப் பரவியிருப்பது தெரியவருகின்றது.



இந்நோய் ஒருவகையான புழுவின் தாக்கத்தினாலேயே ஏற்படுகின்றது. நன்கு வளர்ச்சியுற்ற இப்புழு, நூலைப் போன்று நீளமானது இப்புழுவும் இரண்டு வகைப்படுகின்றன.



ஒன்று **WUCHERERIA BANCROFTI** மற்றயது **DRUGIAMALAYI** எனப் பெயரைக் கொண்டனவாகும்.

இவ்வகைப்புழுக்களால் நோய் ஏற்பட்டபோதிலும் அந்நோயைப்பரப்புவது ஒருவகை நுளம்பாகும் அது **CULAT FATIGANS** எனப்படும் நுளம்பாகும் இரவு நேரங்களில் கடிக்கும். இந் நுளம்பு கீட்டயா எனப்படும் கிருமியை மனித உடலில் செலுத்தும். இவ்வகைக் கிருமியே யானைக்கால் நோயை ஏற்படுத்தும் நுண்கிருமியாகும். இது சுமார் 18 மாதங்கள் வரை இரத்தத்துடன் கலந்து வளர்ச்சி பெறும். பின்னர் இவை நரம்புத் தொகுதி, உணவுத் தொகுதி என்பவற்றைப் பாதிக்கச் செய்யும்.

யானைக்கால் நோய்க்கான அறிகுறிகள் பல உள்ளன. அவ் அறிகுறிகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் வெளிப்படும். கிருமி தாக்கும் போது அவர் சுகதேகியாகவும் எதிர்ப்புசக்தியையும் கொண்டிருப்பார்.

நோய் பரவலாகக் காணப்படும் பிரதேசங்களில் எதிர்ப்புச்சக்தி அதிகமாக கொண்டிருப்பவர்களிடம் இந் நோய் பரவிவிடாது எனினும் வயதானவர்களிடம் இந்நோய் அறிகுறி விரைவில் தென்படும். அவர்களிடம் இந்நோய் கிருமிதொற்றிய 10 முதல் 12 மாதகாலப்பகுதியில் நோய் அறிகுறி தீவிரமாகக்காணப்படும்.

முதலில் மூன்று முதல் ஐந்துநாட்கள் வரை காய்ச்சல் ஏற்பட்டு நீங்கும். இதன் போது நரம்புத்தொகுதி பாதிக்கப்படும்.

முதலில் கை, கால் வயிற்றுப்பகுதி பாதிக்கப்படும் இதன் போது நாளங்கள் வீங்குவதுடன் தொடும் போது வலியும் ஏற்படும் பின்னர் நீங்கிவிடும்.

இவ்வாறான அறிகுறிகள் நிரந்தரமாக் காணப்படுமானால் அது யானைக்கால் நோய்க்கான அறிகுறி என்பதை உணரலாம். எனினும் இவ்வகை நோய்க்கிருமிகள் உடலைப் பாதித்துள்ளனவா என்று இரத்தப் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந் நோய்க்கான சிகிச்சை முறை பல உள்ளன. ஒருவரின் உடல் நிறைக்கேற்ப ஒரு கிலோவுக்கு ஆறு முதல் எட்டு மில்லி கிறாம் வரையான மருந்துக் குளிசைகளை ஒரு நாளைக்கு மூன்று வேளை உபயோகிக்கலாம் பக்றீரியாக்கள் மூலம் பாதிப்படைந்திருப்பின் தடுப்பூசி மூலம் சிகிச்சையளிக்கலாம் மற்றும் உருக்குலைந்த அவயவங்களை சத்திரசிகிச்சை மூலம் சீராக்கலாம்.

எனினும் இது பரவாதிருக்க நுளம்புகள் பெருகாமல் தடுக்கும் வழிகளை முன்கூட்டியே எடுப்பது முக்கியமாகும்.

## உளவியல் மேதை "கிளார்க்"

மருத்துவர் "கிளார்க்" எனும் உளவியல் மேதை சொல்கின்றார் இன்று நீ என்ன நினைக்கின்றாயோ அதுதான் வருங்காலத்தில் உன் சாதனையாக மாறுகின்றது. நினைப்பு என்பது பிழைப்பைப் கெடுக்கும் என்பதை விட்டு பிழைப்பை கொடுக்கும் என்று ஏன் சிந்திக்கக் கூடாது. உனது இலட்சிய நினைப்புத்தான் பிழைப்பை கொடுக்கின்றது என்கின்றார் அவர்.

## பொறியியலாளர் "ராபட் நேப்"

ராபட் நேப் என்பவர் பொறியியல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது பொறியியலாளர் ஆவது மட்டுமல்ல என்னுடைய இலட்சியம் இந்த தேசத்திலுள்ள எல்லாப் பொறியியலாளர்களும் என்னிடம் வந்து ஆலோசனை கேட்க வேண்டும் என்று சக மாணவர்களிடமும் பேராசிரியர்களிடமும் சொல்லிக். கொண்டிருப்பாராம் அவர். அதன்படி அமெரிக்காவில் புகழ் பெற்ற பொறியியலாளர், ஆலோசகரும் ஆனார்

## காது இரைச்சல்

**காதில் கோயில் மணி அடிப்பது போன்ற சத்தம் கேட்பதாக சிலர் கிலியைகிளப்புவார்கள் இன்னும் சிலர் காதில் யாரோ பேசுவதாக கூட சொல்வார்கள் வேறு சிலருக்கு வெறுமனே இரைச்சல் மட்டுமே கேட்கும். கார் சீறிப் பாய்வது மாதிரி, குக்கர் ஒலி மாதிரி, புயல் ஓசை மாதிரி ஹைபிட்ச்- லோபிட்ச் என்று ஒலியின் சகல பரிணாமங்களிலும் சங்கடத்தை ஏற்படுத்தும் இந்தப் பிரச்சினையை Tinnitus என்று சொல்வார்கள் இந்த லத்தீன் வார்த்தைக்கு இரைச்சல் என்பது தான் அர்த்தம்.**

**இந்தப் பிரச்சினையோடு வரும் நோயாளிகளை மட்டும் ஒரு சந்தேகக் கண்ணோட்டுதான் பார்க்க வேண்டும். ஏனெனில் சில மனநோயாளிகள் கூட காதில் குரல் கேட்பதாக வந்து விடுவார்கள். வந்திருப்பவர் மனநோயாளி இல்லை என்று உறுதி செய்து கொண்ட பிறகே சிகிச்சை செய்ய வேண்டும்.**

**காது, காதில் இருந்து மூளைக்குப் போகும் நரம்பு, மூளை இவற்றில் எது பாதிக்கப்பட்டாலும் காது இரைச்சல் வரும் ஆபத்து உண்டு. காதுக்குப் போகும் ரத்த ஓட்டம் குறைவதால் மிக மிக சத்தமான ஒலி கேட்பதால் (பட்டாசு வெடிப்பது போல) செவிப்பறை மீது அழுக்குப் படிந்து அது அழுத்திக் கொண்டிருப்பதால் இப்படி காது இரைச்சல் வர பல காரணங்கள் உண்டு சுருக்கமாக சொல்வதானால் காது கேட்காமல் போவதற்கு என்னென்ன காரணங்கள் உண்டோ அது எல்லாம் காது இரைச்சலையும் கொண்டு வர வாய்ப்புள்ளது**


**காது இரைச்சலை குறிப்பிட்ட நோயாளிகள் தான் கேட்க முடியும் என்று இல்லை. சில நோயாளிகளின் காது மீது காது வைத்துக் கேட்டால் இரண்டாம் நபர் கூட அதை கேட்க முடியும்.**



ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் பாடசாலையின் ஆய்வு கூடத்தில் இறுதியாக வடிவமைக்கப்பட்ட றோபோக்களைப் பார்வையிடச் சென்ற ஜப்பானிய முடிக்குரிய இளவரசர் நறுகிற்ரோ HRP-2 என்ற றோபோவுடன் கைகுலுக்குகின்றார்.

## வீட்டில் பல்வேறு வேலைகளை செய்யவல்ல றோபோ

**10 முகங்களை அடையாளம் காணக் கூடியதும் 10,000 சொற்களை புரிந்து கொள்ளக்கூடியதுமான ஒரு றோபோவை ஜப்பான் மிற்சுபிசி நிறுவனம் அறிமுகம் செய்து வீட்டில் உதவியாளர்களிற்கான தேவைகளைப்பூர்த்தி செய்துள்ளது. இவ் ஒரு மீற்றர் நீளமான றோபோ வீட்டில் உதவியாளராகவும் செயலாளராகவும் வீட்டின் உறுப்பினராகவும் செயற்பட வல்லது.**



**இவ் றோபோமனித நடத்தைகளைக் கொண்டுள்ளதுடன் வீட்டில் உரிமையாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் வீட்டை அவதானித்துக் கொள்வதுடன் கள்வர்களிற்கான எச்சரிக்கைச் செயற்பாடுகளையும் கொண்டுள்ளது எனவும் இந் நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்.**

**இது நோயாளர்களின் நிலைமைகளைக்கூட கண்காணிக்கக்கூடியது. அத்துடன் இது ஒரு செயலாளர் போன்று வீட்டு உரிமையாளரின் குறிப்புகளை பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட சில சந்திப்புக்கள் செயற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்ட நேரம், விடயம் போன்றவற்றையும் அவர்களிற்கு ஞாபகப்படுத்தி உதவுகிறது. இதுவே தொடர்பாடல்களை ஏற்படுத்தக் கூடிய வீட்டு உபயோகத்திற்குப் பயன்படக்கூடிய முதலாவது றோபோ என மிற்சுபிசி நிறுவனத்தினர் கூறுகின்றனர். இது விற்பனைக்கு வரும் போது 1.58 மில். ஜென்களாக இருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

## குழந்தைப் பேறின்மை

குழந்தை பேறின்மை என்பது உலகம் முழுவதும் காணப்படும் குறைபாடு. இதில் நாடு, எல்லை என்பதெல்லாம் கிடையாது இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் ஆறு தம்பதிகளில் ஒருவருக்கு குழந்தைப் பேறு வாய்ப்பது இல்லை. மலட்டுத்தன்மைக்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன என்ற போதிலும், ஒரு பெண்ணின் கருப்பையில் முதிர்வுறாத கரு உயிர (Embryo) கருப்பை சுவரை நன்கு பிடித்து வளர முடியாமல் போவதுதான் முக்கியமானதாக கருதப்படுகிறது.

இது போன்று கரு வளர முடியாமல் போவதற்கு என்ன காரணம் என்று விஞ்ஞானிகள் நீண்ட காலமாக ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வுக்கு எலிகளை வைத்து சோதனை நடத்திய போது எல்பிஎ என்ற குறிப்பிட்ட மூலக்கூறு முக்கிய விஷயமாகப் பட்டது. இந்த மூலக்கூறுக்கும் கருவுயிர் கருப்பையில் பற்றி வளருவதற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை அவர்கள் அப்போது தெரிந்து கொண்டனர்.

இந்நிலையில் எலிகளில் காணப்படுவது போலவே இந்த மூலக்கூறுகள் மனிதர்களிடமும் செயற்படும் பட்சத்தில் குழந்தைப் பேறின்மையை குணப்படுத்த புதிய யுக்திகளைக் கண்டு பிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## அமெ. சனாதிபதியான லிண்டன் ஜான்சன்

அமெரிக்க சனாதிபதியாக இருந்த லிண்டன் ஜான்சன் தன்னோடு அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவர்களிடம் ஆரம்பகாலங்களில் கூறுவார் என்னுடைய மனதில் நான் ஒரு படம் வரைந்து அதையே தொடர்ந்து எழுதி எழுதி பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நான் இருப்பது போன்ற படம் அது என்று சொல்லிக் கொண்டே இருப்பாராம். அதன் படியே பிற்காலத்தில் அமெரிக்க சனாதிபதியானார்.

## 14 டொலருக்கு ஏலம் போன கார்

14 டொலருக்கு ஏலம் போன கார் கொடுக்கப்படாததால் ஏலம் கேட்டவர் நிறுவனத்தினர் மீது வழக்குத், தொடர்ந்துள்ளார். சீனா நாட்டு தலைநகர் பெய்ஜிங்கிலுள்ள ஒரு ஏலக் கொம்பனி பழைய கார் ஒன்றை இன்டர்நெட் மூலம் ஏலம் விட்டது. அதை ஒருவர் 14 டொலருக்கு ஏலம் கேட்டார் அதற்கு அந்த நிறுவனத்தினரும் ஒப்புக் கொண்டனர். ஆனால் ஏலம் கேட்டவருக்கு கார் கொடுக்கப்படவில்லை ஏனெனில் அந்தக் காரின் உண்மையான மதிப்பு 12 ஆயிரம் டொலர்கள் ஆகும். தங்கள் தவறை உணர்ந்த ஏலக் கொம்பனியினர் அந்தக் காரை மீண்டும் ஏலம் விட்டனர். அதை அறிந்த முதலில் ஏலம் கேட்ட நபர் அந்த ஏல நிறுவனத்தினர் மீது நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

# மகிந்தவின் ஆட்சியை விட ரணிலின் ஆட்சியில் சந்திரிகாவிற்கு கூடுதல் பாதுகாப்பு கிடைக்கும்?

உக்கிய கயிற்றை கொடுப்பதும் அதை விழுங்கி ஜீரணிப்பதும் அரசியல் நாடக அரங்கேற்றங்களில் வழமையாக நடைபெறுவது ஒன்றாகும். விசேடமாக தேர்தல் காலங்களில் உக்கிய கயிற்றை கொடுப்பதும் அதை விழுங்குவதும் நடைபெறுவது வழமையாகும். கயிற்றை கொடுப்பது, அதை விழுங்குவதும் நாட்டின் நன்மைக்காக அல்ல. தமது நலன்களை பாதுகாப்பதற்காகவே. இன்று இரு பிரதான கட்சி வேட்பாளர்களும் கயிறுகளை கிலோகணக்கில் விழுங்கிக் கொண்டிருக்கின்றார்கள்

கொடுத்த இந்தக் கயிறுகளை எப்படி விழுங்குவது என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்ப்போம்.விழுங்கிய கயிறுகளை மீண்டும் வாந்திஎடுப்பது கடினமான விடயமாகும். விசேடமாக தேர்தல் காலங்களில் கொடுக்கும் உக்கிய கயிறுகளைப் பற்றி வேட்பாளர்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். இன்று அரசியல் களத்தில் குதித்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல் நீரோட்டத்தின் வேகங்களுக்கு ஈடுகொடுத்து நீந்தும் வல்லமை உடையவர்கள். இந்த இருவரும் அடிக்கும் மேளதாளங்களுக்கு ஏற்ப அபிநயம் பிடித்து ஆடக்கூடிய வல்லமை படைத்தவர்கள். ஆனால் சனாதிபதித் தேர்தலில் இருவரும் வெல்வோம் என நம்பிக்கை உடையவர்கள் தங்களின் வாக்குகளை அதிகரித்து கொள்வதில் மிகக் கரிசனையுடன் செயற்படுபவர்கள். ஆனால் தங்களிடத்தில் கொடுக்கும் இந்தக் கயிறுகளைப் பற்றிதேர்தல் காலங்களில் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

இந்த இரண்டு சனாதிபதி வேட்பாளர்களில் மிக கவனமாக மகிந்த ராஜபக்ஷ செயற்படவேண்டும். சனாதிபதித் தேர்தல் வெற்றியை விட கட்சிக்குள் இருக்கும் எதிர்ப்புக்களை முறியடிப்பது மிக கடினமான தொன்றாகும். நீண்டகால அரசியல் வரலாறு அவரிடம் உண்டு. கட்சியில் மகிந்த ராஜபக்ஷ செய்த சில தியாகங்களினால் இன்று பண்டாரநாயக்க குடும்பத்தார் சார்பில் சனாதிபதி வேட்பாளர் என்ற உயர் பதவிக்கு வந்துள்ளார். பண்டாரநாயக்க குடும்பத்தை தோற்கடித்த பெரும் புகழ் இன்று மகிந்த ராஜபக்ஷவை சார்ந்ததாகும். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பல சிக்கல்கள் உள்ளன. கட்சிக்குள் பல உட்பூசல்கள் உள்ளன. இன்றும் சுதந்திரக்கட்சி பண்டாரநாயக்க குடும்ப ஆதிக்கத்தின் கீழ்தான் உள்ளது. இதை

லங்காதீப சிங்கள நாளிதழ்
கட்டுரை ஆசிரியர்
ரங்க களன்சூரிய
மொழியாக்கம் அ. சக்திவேல்

முறியடித்து ராஜபக்ஷ யுகத்தை அவரால் இந் நாட்டில் ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகம். ஒரு கட்சியில் இரண்டாம் கட்டத்தில் இருந்து முதலாவது இடத்தை பெற வேண்டுமானால் பல சவால்களை சந்திக்க வேண்டிவரும். சம்ப காலங்களில் நடந்தவைகளை நாம் உதாரணமாக எடுத்துக்கொண்டால் பிரேமதாசா இதில் முதலிடம் வகிக்கின்றார்.

1988ஆம் ஆண்டு ஆர் பிரேமதாசா சனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தபின் அவருக்கு எதிராக சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தல் களத்தில் இறங்கினார். அப்பொழுது தனக்கு மிக நெருக்கமானவர்களுடன் சனாதிபதித்தேர்தலில் இம்முறை, தனக்கு வெற்றி நிச்சயம். ஏனெனில் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் வாக்கும் எனக்குத்தான் கிடைக்கும் என்றார் சிறிமா. காரணம் ஐக்கிய தேசியக்கட்சி ஆதிக்கம் ஜே.ஆர் ஜயவர்த்தன குடும்பத்தினரிடம் இருந்து பிரேமதாசாவின் கைக்கு மாறியது இதை நேராக எதிர்க்கமுடியாத ஜே.ஆர். ஜயவர்த்தன மறைமுகமாக தனக்கு ஆதரவு தந்து ஆர்.பிரேமதாசவின் வெற்றியை அவர் தடுத்து நிறுத்திவிடுவார் என்பதாவாகும் இதேபோல் பண்டாரநாயக்க குடும்பத்தாரின்தும் சந்திரிகாவின் வாக்குகள் தனக்கு கிடைக்கும்

என்று ரணில் விக்கிரமசிங்க நினைக்கின்றாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை விட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் தனக்குஅதிக பாதுகாப்பு கிடைக்கும் என்பதை சந்திரிகா மிக உறுதியாக நம்புகிறார்.

ரணில்விக்கிரமசிங்கவின் சமீபத்திய இந்திய விஜயத்தின் பொழுது, சந்திரிகாவின் பதினொரு வருடகால ஆட்சியின் பொழுது சமாதான நடவடிக்கை எப்படிமுன்னெடுத்தார். என்பதைப்பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் சந்திரிகாவைப்பற்றி மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார். அதேபோல் கடந்த ஆறாம்திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி சம்மேளனத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்பைப் பற்றி சந்திரிகா மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார்.

அவரின் சமாதான அரசியல் நகர்வினால் நாடு பொருளாதாரத்தில் முன்னேறியதைப் பற்றி விபரமாக எடுத்துக்கூறியுள்ளார். சாதாரணமாக சந்திரிகாவின் வாயால் ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி புகழ்வாரானால் கருங்கல்லில் பட்டை உரித்ததற்கு சமமாகும் எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையை பெறுவதற்காகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் புகழாரம் சூட்டியுள்ளார். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளைகடைசி சுனாமிப் பேரலை கட்டமைப்புவரைக்கும் மேற்கொண்டார். ஆனால் அவருக்கு பாதகமான நிலை ஏற்பட்டது

வெண்தாமரை அமைப்பு, சர்வதேச இணக்கப்பாடு, அதிகார பரவலாக்கல், கடைசியில் சுனாமிப்பேரலை கூட்டமைப்புடன் சமாதான முன்னெடுப்பை சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்துக்கொண்டு செயற்பட்டார். இவைகள் எல்லாம் இனப்பிரச்சினை தீர்வுக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையின் பெயரில் செயற்பட்டார். புரிந்துணர்வு ஒப்பந்தம்,போர்நிறுத்த ஒப்பந்தங்கள் இவைகள் யாவும் ரணிலின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டன. இதை அமுல்படுத்தா வண்ணம் இவரை பல தீயசக்திகள் பின்நின்று வழி நடத்தின. அதனால் மற்றும் ஒரு சமாதான சந்தர்ப்பத்தையும் இழந்தார். இப்பொழுது அவரின் நெருங்கிய சகாவான மகிந்த ராஜபக்ஷவும் மேற்கூறிய சகல திட்டங்களுக்கு எதிராகவும் சந்திரிகாவுக்கு எதிராகவும் செயற்படத்தொடங்கியுள்ளார். இவர்களும் போக்குடைய இனவாதிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுஒப்பந்தம் செய்துகொண்டபடியால் இவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஏனைய கட்சிகளும் இவர் ஒரு இனவாதி என்று தற்பொழுது கூறி வருகின்றன. சமஷ்டி ஆட்சி முறையை இந்நாட்டில் கொண்டு வருவதற்கு சந்திரிகா குமாரதுங்கவும், மங்கள சமரவீரவும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதை நாங்கள் மறக்க முடியாது. ஆனால் இவைகளை எல்லாம் மறந்து தனது கட்சியினர் தனக்கு குழிபறிக்கின்றார்களே என்று சந்திரிகா இப்பொழுது அவர்களைப் பற்றி பெரும் சீற்றம் கொண்டுள்ளார். இந்த இனவாதிகளோடு இணைந்து அவர்களின் நிபந்தனைகளுக்கு கட்டுப் பட்டு இந்த நாட்டில் எதிர்கால அரசியலை

எப்படி நடத்தப்போகின்றார் என்பது எதிர்காலத்தில் ராஜபக்ஷவுக்கு ஒரு கேள்விக் குறியாகவே அமையப்போகிறது. லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிபோன்ற பழம் பெரும் இடதுசாரிகளும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரபரவலாக்கலை ஏற்றுக்கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கின்றனர். வாசுதேவநாணயக்காரவும்சமீபத்தில் இவற்றை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ இவற்றுக்கு முழு எதிரியான ஜாதிகஹெலஉறுமய, ஜே.வி.பியுடன் இணைந்து எப்படி நாட் டில் ஆட்சியை நடத்தப் போகிறார் என்பதைப் பற்றி நாங்கள் விரிவாக ஆராய வேண்டும். ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி.ஆகிய இரண்டு கட்சிகளும் தங்களை பாது காத்துக்கொள்வதற்காகவே மகிந்த ராஜ பக்ஷவுடன் கூட்டு சேர்ந்துள்ளன என்று சிலர் கூறுகின்றனர். இவர்கள் நிபந்தனைகள் இல்லாமல் அல்லது நிபந்தனையுடன் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கே என்பது உண்மை. தங்கள் அரசியல் வங்குரோத்தை வெளி உலகிற்கு காண்பிக்காமல் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளனர். ஆனபடியால் ஜே.வி.பி.யினதும் ஜாதிக ஹெல உறுமய கட்சியினதும் இந்தக் கயிறை தற்பொழுது மகிந்தராஜபக்ஷ விழுங்கியுள்ளார்.

இந்தக் கயிறுவிழுங்கல் நாட்டுக்கு உகந்ததல்ல. இதனால் சிறுபான்மை தமிழ், முஸ்லிம்களின் ஆதரவுகள் இவருக்கு இத்தேர்தலில் கிடைக்கும் என்பதைப் பற்றி உறுதியாகக் கூறமுடியாது.ஜே.வி.பி.-மகிந்த ராஜபக்ஷ கூட்டு ஒப்பந்தத்தின் பின் பிரதமர் பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினைத்தீர்வினை காண்பேன் என்று அறிக்கைவெளியிட்டுள்ளார். இனப்பிரச்சினையின் சிக்கலை அவர் நன்கு உணர்ந்தவர்.

பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதை ஏற்கனவே கூறியுள்ளார். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக பொதுக் கூட்டங்களில் கூறிவருகின்றார். அதற்கான வழிமுறைகள் என்ன, இது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்படும் என்பதை விளக்கமாக அவர் கூறவில்லை. அவர் கௌரவமான அரசியல் வாதி,உற்ற நண்பன் என்றும் ஒரு காலத்தில் அவரை அமைச்சரவையின் ஊடகவியலாளர் என்ற பட்டத்தையும் சிறிலங்கா சுதந்திர கட்சினர் சூட்டி இருந்தனர். இவருக்கு ஊடகங்களின் ஆதரவுகள் அதிகம் உண்டு. இந்த ஊடகங்களின் பிரச்சாரத்தினால் இன்று மகிந்த ராஜபக்ஷவுக்கு நல்ல தேர்தல் விளம்பரம் கிடைத்துள்ளது. ஆனால் ஊடகங்களின் பிரச்சாரங்கள் விளம்பரப் படங்களினால் மட்டும் சனாதிபதித் தேர்தல்களில் வெற்றிபெற முடியாதென்பதை சகலரும் நன்கு அறிவார்கள். இன்று மக்கள் சுய புத்தியுடன் இருக்கின்றார்கள். ஆனபடியால் மின்கம்பங்கள், மதில்களில் விளம்பரங்கள்ஒட்டுவதில் எந்தப் பலனும் கிடையாது. நாட்டுக்கு தெளிவான



விளக்கத்தை மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்க வேண்டும். ஆனால் இந்த இனவாதிகளின் கொள்கைகளை ஏற்று அவர்களின் நிபந்தனைக்கு அடிபணிந்துள்ள ராஜபக்ஷ எப்படி இந்த நாட்டுப் பிரச்சினையை தீர்க்கப் போகிறார். தற்பொழுது இடியப்ப சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பிற்கு இணங்க அவர் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் ஜே.வி.பியும்,ஹெல உறு மய கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு தாங்கள் ஆதரவளிக்கவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ என்ற தனிநபர் ஒருவருக்கே வாக்களிக்கபோகிறோம் எனக் கூறியுள்ளனர்.எது எப்படி இருந்தாலும் கட்சியின் கொள்கைகளுக்கு இவர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சியினரைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது கொள்கை பிரகடனத்தை வெளியிடவேண்டும்.

ஜே.வி.பி. பன்னிரண்டு நிபந்தனைகளையும், ஜாதிக ஹெல உறுமய எட்டு நிபந்தனைகளையும் விதித்துள்ளன. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் என்ன நிபந்தனைகளை விதிக்க போகிறதென்று இதுவரை வெளியிடவில்லை. ராஜபக்ஷவுக்கு விதித்துள்ள நிபந்தனைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவுள்ளன. இந்த வேறுபட்ட கருத்துக்களினால் இவரால் அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியாது. அப்படி இவர் சனாதிபதித் தேர்தலில் வென்றாலும் இந்த இனவாத கும்பலுடன் ஆட்சி நடத்துவது மிகக் கடினமாகும். ஆகவே இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க முடியாது.



நன்றி டெய்லிமிரர்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 1985 - - 06 - 21

கண்நெகிழ 2000 - - 09 - 17



## வீரவேங்கை –செங்கொடி

*வேலாயுதபிள்ளை- கேசவன்*

**(மு/சுதந்திரபுர கனிஷ்ட உயர்தரவித்தியாலய 10ஆம் ஆண்டு மாணவன்)**

தமிழீழப் புறநானூற்றின் தனித்துவமே!
ஐந்தாண்டு சென்றதுவோ உன் நின்முகம் மறைந்து
தினம் தினம் தவிக்கின்றோம் - உன் வதனமதைக்
காண ஏங்குகின்றோம்
கல்வியிலே நீ புலியாகி விளங்கி-பின்
பாரினிலே நீ புலியாகி மௌனித்து விட்டாய்!
தாங்க முடியவில்லை எம் செல்வமே
உனக்கான நினைவாண்டில் உன்னுடன் மடிந்த
புலித் தோழர்களையும் எங்கள் நெஞ்சம் நெகிழ
காணிக்கை கூருகின்றோம்.

*இல–68,*
*சுதந்திரபுரம்,*
*உடையார்கட்டு.*

(6710)

**உன்பிரிவால் தவிக்கும்**
**குடும்பத்தினர்.**

# போருக்கான மையத்தைக்கொண்ட மகிந்த - ஜே. வி. பி. ஒப்பந்தம்

**சோஸலிச சமத்துவக்கட்சி**

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே வி. பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தமானது இலங்கையில் 20 வருடகால யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பை வழங்கியுள்ளதாக சோஸலிச சமத்துவக்கட்சி தெரிவித்துள்ளது. மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே. வி. பி.க்கும் இடையிலான ஒப்பந்தத்தில் இடைக்காலதன்னாட்சி பேச்சுவார்த்தை, ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு, நோர்வே நாட்டின் ஏற்பாட்டாளர் நிலை, ஒற்றையாட்சி முறை மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கையை திருத்தியமைத்தல் போன்ற ஏற்பாடுகள் போருக்கான மையங்களாகக் கருதப்படுவதாக விஜய் டயஸ் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி சமாதானம் காணப் போவதாக கூறுவதை டயஸ் விமர்சித்துள்ளார்.

அதேநேரம் சமாதானமே தமது கொள்கையாக உள்ளபோதும் போர் ஒன்று ஆரம்பிக்கும் என்பதற்காக தாம் பயப்படவில்லை என ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளமையை விஜய் டயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

1956 முதல் 59 ஆம் ஆண்டு வரை பிரதமராகவிருந்த இன்றைய சனாதிபதியின் தந்தையான சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்க கொண்டுவந்த சிங்களம் மட்டும் என்ற சட்டமும், சனாதிபதியின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க1972 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்திய இனத்துவ அரசியலமைப்பு 1983 ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சியில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிராக இனவன்முறையின் அடுத்தக்கட்டமே பிரதமருக்கும் ஜே. வி. பியிக்கும் இடையிலான ஒப்பந்தம் என சோஸலிச சமத்துவக் கட்சி கருதுவதாக விஜய் டயஸ் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமரின் ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடி வங்கிக்கணக்குகள் மீது விசாரணை நடத்தப் பணிப்பு

ஆழிப்பேரலை நிதி மோசடிப் புகாரையடுத்து சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்த சிறிலங்கா நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

குற்றத்தடுப்புத் திணைக்களத்துக்கு இதற்கான அனுமதியை கொழும்பு பதில் நீதிபதி ஜயந்த தியாஸ்நாணயக்கார அளித்துள்ளார்.

ஆழிப்பேரலைக்காக கிடைக்கப்பெற்ற சர்வதேச நிதியைத் தனது சொந்த வங்கிக் கணக்குக்கு மகிந்த மாற்றிய செய்திகளை ஊடகங்கள் ஆதாரத்தோடு அம்பலப்படுத்தின.

ஆனால் 82.9 மில்லியன் ரூபாய் மகிந்தவின் கணக்குக்கு மாற்றப்பட்டது உண்மையானாலும் அதிலிருந்து ஒரு சதம்கூட மகிந்த எடுக்கவில்லை என்று அவரது செயலாளர் லலித்வீரதுங்க கூறியிருந்தார்.

இந்நிலையில் கொழும்பு நீதிமன்றம் மகிந்தவின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கல்வியை தனியார் மயப்படுத்தும் திட்டம் குறித்து மக்களுக்கு விளக்கப்படும்

இலவச கல்வியை தனியார் மயப்படுத்துவது தொடர்பான உலக வங்கியின் யோசனைகள் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்தும் செயற்றிட்டம் அடுத்து சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது உலக வங்கியின் யோசனைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை கல்வியை பாதுகாக்கும் தேசிய மத்திய நிலையம் தெரிவிக்கின்றது. எதிர்காலத்தில் இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு முழுமையாக தெளிவுபடுத்தப்படும் எனவும் அந்த நிலையம் தெரிவித்தது.

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

**சம்பளத்திட்டம்:-**

$\frac{4430-5530}{10x110}$ + 2700.00 =7,130.00 + *சிறப்புக் கொடுப்பனவு* 2,300.00=9,430.00

**மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 19.09.2005 ஆம் நாள் திங்கள் காலை 09.00 மணி தொடக்கம் பகல் 01.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.**

**மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை. அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

குறிப்பு:-

**இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுகைப்பகுதி,**
**தமிழீழ போக்குவரவுக்கழகம்,**
**நடுவப்பணிமனை,**
**விசுவமடு.**

(சி-12824)



## சேவை நலன் பாராட்டு

**ஆசிரிய சேவையில் நாற்பது வருடங்களை நிறைவு செய்து (இ.ஆ.சே.வகுப்பு –01) 17.09.2005 இன்று ஓய்வுபெறும் எமது பாடசாலை ஆசிரியை**

## செல்வி வெள்ளைச்சாமி தேவமலர்

**அவர்களுக்கு**
**கல்விச்சேவையில் தங்கள் அர்ப்பணிப்பு**
**அளப்பரியது**
**ஓய்வு காலம் சிறப்புற எமது வாழ்த்துக்கள்.**

**பாடசாலைச் சமூகம்,**
***மு/வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க.பாடசாலை***
***திருநகர் யோகபுரம்,***
***மல்லாவி.,***

(6705)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## கிளிநொச்சி – புதுக்குடியிருப்பு

## பணிநேர மாற்றம்

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்களின் வேண்டுகைக்கு அமைவாக 22.09.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

**கிளிநொச்சி–புதுக்குடியிருப்பு**

நேர ஒழுங்கு

| | கிளிநொச்சி | பரந்தன் | வீசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|
| காலை | 6.30 | 6.50 | 7.35 | 8.20 |

**புதுக்குடியிருப்பு–கிளிநொச்சி**

நேர ஒழுங்கு

| | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| மாலை | 5.30 | 6.15 | 7.00 | 7.20 |

(சி.12825)

**முகாமையாளர்,**
**பேருந்துப்பகுதி,**
**கிளிநொச்சி.**

# ஐக்கிய நாடுகள் சபையில் சனநாயகத்திற்குத் தட்டுப்பாடு

-மன்மோகன்சிங்-

**ஐக்கிய நாடுகள் சபையின் சனநாயகச் செயற்பாடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையை முழுமையாக மாற்றத்திற்கு உட்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கியநாடுகள் சபையின் பொதுக் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே மன்மோகன்சிங் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையை மீளமைப்புச்செய்யும் யோசனையில் பாதுகாப்பு சபையை விஸ்தரிக்கும் செயற்பாடும் கட்டாயமானதாக உள்ளடக்கப்படவேண்டும் என்றும் பாதுகாப்பு சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இயற்கை அனர்த்தங்களின் போது ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையையும் அவர் வலியுறுத்தினார். மின்வலு, பாதுகாப்புத்தன்மை, காலநிலை போன்றவற்றினை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் அத்தியாவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது; பயங்கரவாதத்திற்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது. பயங்கரவாதத்திற்கு உலக நாடுகள் இடம் கொடுக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.

அப்பாவிகளையும் பெண்களையும், குழந்தைகளையும் கண்மூடித்தனமாகக் கொலை செய்யும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முயலும் எந்தவொரு காரணத்தையும் உறுதியுடன் எதிர்க்கும்படியும் அவர் உலகத்தலைவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்; உலகின் எந்தப் பாகமாக இருந்தாலும் பயங்கரவாதத்தை அனுமதிக்க முடியாது பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் விட்டுக்கொடுப்பு சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என சூளுரைத்தார்.

## இந்தியாவைச் சேர்ந்த சரப்ஜித்சிங்கிற்கு தூக்குத்தண்டனையை உறுதிசெய்தது பாகிஸ்தான்

இந்தியரான சரப்ஜித் சிங்குக்கு ஒரு வழக்கில் தான் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில வழக்குகள் இருக்கின்றன. எனவே அவருக்கு கருணை காட்ட முடியாது என பாகிஸ்தான் உயர்நீதிமன்ற நீதிபதி அறிவித்துள்ளார்.

இந்திய பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சரப்ஜித்சிங் கடந்த 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30ஆம் திகதி இந்திய எல்லையைத் தாண்டி பாகிஸ்தான் எல்லைக்குச் சென்றிருந்தார். அவரைப் பிடித்த பாகிஸ்தான் பொலிசார் அவரை குண்டுவெடிப்பு வழக்கு ஒன்றில் குற்றம்சாட்டி அக் குண்டு வெடிப்பில் 89 பேர் இறக்கக் காரணமாய் இருந்தார் என வழக்குப்பதிவு செய்தனர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியது.

இதனை லாகூர் நீதிமன்றம் உறுதி செய்தது. பொலிஸ் விசாரணையின் போது சரப்ஜித்சிங் தனக்கு பாகிஸ்தானில் பல இடங்களில் குண்டுவைக்க இந்திய இராணுவத்தினர் பயிற்சி அளித்ததாகக் கூறியதாக பாகிஸ்தான் அரசு அறிவித்திருந்தது. ஆனால் அதை சரப்ஜித் சிங்கின் சகோதரி மறுத்தார். இது தொடர்பாக இந்திய உயர் அதிகாரிகள் பாகிஸ்தான் அரசுடன் பேசியுள்ளனர். இந்த நிலையிலும் சரப்ஜித் சிங்கின் மரணதண்டனையைப் பாகிஸ்தான் உயர்நீதிமன்று உறுதி செய்துள்ளது.



மதுரையில் நடிகர் விஜயகாந்தின் "தேசிய முற்போக்குத் திராவிடக்கழகம்". கட்சியின் மாநாடு நடைபெற்றபோது மேடையில் விஜயகாந்த் மற்றும் பிரமுகர்கள் நிற்பதையும், மாநாட்டில் கலந்து கொண்ட மக்களில் ஒருபகுதியினரையும் காணலாம்.

## பேருந்து விபத்துக்குள்ளானதில் ஏழுபேர் உடல்கருகிப்பலி

இந்திய ஆந்திரா மாநிலத்தில் பாரவூர்தி-பேருந்து நேருக்கு நேர் மோதியதில் ஏழு பேர் உடல் கருகிப் பலியாகினர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, விசாகபட்டினம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும், கல்கத்தாவிலிருந்து விசாகப்பட்டினம் நோக்கி வந்து கொண்டிருந்த பாரவூர்தியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் பேருந்தின் எரிபொருள் கொள்கலன் தீப்பிடித்து எரிந்தது. அந்தத் தீ பாரவூர்திக்கும் பரவியது இதனால் பேருந்தில் பயணம் செய்த ஏழு பேர் உடல்கருகிப் பலியாகினர்.

## விஜயகாந்தின் கட்சி மாநாட்டில் எரிச்சல் ஏற்படுத்திய படப்பிடிப்பாளர்

தென்னிந்திய நடிகர் விஜயகாந்தின் கட்சி மாநாடு கடந்த புதன் கிழமை இடம்பெற்ற போது விஜயகாந்திற்கு எரிச்சல் ஊட்டும் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இது பற்றித்தெரியவருவதாவது;

விஜயகாந்தின் புதிய கட்சி மாநாடு காலை ஏழு மணிக்கே தொடங்கியதால் செய்தியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் காலை ஏழு மணிக்கே மாநாட்டிற்குச் சென்று விட்டனர். இதனால் அவர்கள் காலையுணவு உண்ணாமல் விஜயகாந்தின் கட்சிப் பெயர் அறிவிப்பைக் கேட்பதற்காக 10.15வரை நின்றனர். அதன் பின்னரே கட்சியின் பெயரை விஜயகாந் அறிவித்தார். இதன்பின்னர் அனைத்து பத்திரிகையாளர்களும் தமக்குரிய ஆசனங்களைவிட்டு எழுந்து உணவு உண்பதற்காகச் செல்லவே வெறுமையாக இருந்த பத்திரிகையாளர் பகுதி ஆசனங்களை ஒரு பத்திரிகையாளர் படம் எடுத்திருக்கின்றார். இதனைக் கண்ட விஜயகாந்த் சினம் கொண்டவராக "விஜயகாந் மாநாடு பிசுபிசுத்தது எனச் செய்தி சொல்வதற்காக இப்படிப்படம் எடுத்திருக்கின்றனர். மாநாட்டிற்குத் தடங்கல் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இதற்கு இடம்தராமல் கட்சியினர் கட்டுப்பாடு காக்க வேண்டும். மாநாட்டை வெற்றிபெறவைப்பது நமது கடமை" என ஒலி வாங்கி ஊடாகப் பேசினார்.

## மன்மோகன்சிங் புஷ்ஷுடன் நடத்திய பேச்சுவார்த்தையை பா.ஜ. விமர்சிப்பது தேவையற்றது - ஜெயந்தி நடராஜன்

அமெரிக்காவில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும், அமெரிக்க சனாதிபதி புஷ்ஷும் நடத்திய பேச்சுவார்த்தையை பாரதிய ஜனதாக்கட்சி விமர்சனம் செய்திருப்பது தேவையற்றது என காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் இந்தியப் பிரதமரும் அந்நாட்டு சனாதிபதியும் சந்தித்து உரையாடியதில் உள்ள உண்மைத்தன்மையை அறியாமல் பாரதிய ஜனதா அதனைப்பற்றி விமர்சனம் செய்திருப்பது தேவையற்றது எனத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; உத்தரப் பிரதேச மாநிலத்தில் மூளைக்காய்ச்சல் நோய் பரவி பல குழந்தைகளின் உயிர்களைப் பலியெடுத்து வருகின்ற நிலையிலே அந்நோயைத் தடுத்து நிறுத்த அம்மாநிலத்தை ஆட்சிசெய்யும் பா.ஜனதா அரசு எவ்வித நடவடிக் கையையும் எடுக்கவில்லை.

ஆனால் அம்மாநில அமேதி தொகுதியில் வெற்றி பெற்றவரும், சோனியா காந்தியின் மகனுமாகிய ராகுல்காந்தி நோயால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மருத்துவ உதவிகளைச் செய்து வருகிறார்.

இந் நோயைக் கட்டுப்படுத்த உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு மத்திய அரசு ஒரு உலங்கு வானூர்தியைக் கொடுத்தது. ஆனால் மாநில அரசோ அரசியல் காரணங்களுக்காக அவ் உலங்குவானூர்தியை ஏற்க மறுத்து வருகிறது. இது மிகவும் கண்டனத்திற்குரியது.

## இந்தியா, ரஷ்யா இருநாடுகளும் பொருளாதாரத்தை வலுப்படுத்த இணக்கம்?

இந்தியாவும் ரஷ்யாவும் தமது நாடுகளுக்கிடையே பொருளாதாரத்தை வலுப்படுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளல் அவசியமென இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.நேற்று முன்தினம் நியூயோர்க்கில் இந்திய பிரதமர் மன்மோகசிங்கிற்கும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் இது குறித்து விரிவாக கலந்துரையாடியதாகத் தெரிகிறது. இருநாடுகளும் ஒத்துழைப்பு பணிகளை விரிவுபடுத்த கூட்டாய்வுக் குழுவிற்கு புது டில்லி யோசனை கூறியிருப்பதாக இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த யோசனைக்கு ரஷ்யா விரைவில் பதிலளிக்குமென புட்டின் கூறியுள்ளார். பாதுகாப்பு விடயங்களை விரிவாக்கவும் மற்றும் அரசியல் உறவுகளை பலப்படுத்தவும் இருநாடுகளும் இணங்கியுள்ளன.

## பாரதிய ஜனதாக்கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம்

பாரதிய ஜனதாக்கட்சியின் மூன்று நாள் தேசிய செயற்குழுக்கூட்டம் நேற்று பிற்பகல் தொடங்கியது. இதற்கு முன் மாநில செயலர்கள் மற்றும் அமைப்புத்தலைவர்களிற்கான கூட்டம் நடைபெற்றது.

மத்திய அரசின் சமரச கொள்கைகள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு விலைவாசி உயர்வு போன்ற விடயங்கள் பற்றி இச் செயற்குழு பரிசீலித்தது என கட்சியின் துணைத் தலைவர் வெங்கையாநாயுடு கூறியுள்ளார்.


## கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (கிளிரெக்)

## உயர் தொழில் பயிற்சி

*பயிற்சி நெறிகள்*

1. *மேசன் பயிற்சி*
2. *தச்சுவேலைப் பயிற்சி*

*மேல் உள்ள அனைத்துப்பயிற்சி நெறிகளும் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தொழில்நுட்ப பாடத்திட்டத்திற்கமைவாகவே நடைபெறும்.*

* *பயிற்சிக்காலம்:- 04 மாதங்கள் (சனி,ஞாயிறு நாட்களில் மட்டும்)*
* *பயிற்சிக் காலக் கொடுப்பனவு:-நாள் ஒன்றுக்கு ரூபா 200*
* *சான்றிதழ்:- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.*
* *பயிற்சி நடைபெறும் இடம்:-கிளி/ தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.*

மேற்படி உயர் பயிற்சியினைப் பெறவிரும்புவோர் 25.09.2005 திகதிக்குமுன் எமது நிறுவனத்திற்கு வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளவும். இப்பயிற்சியானது அடிப்படை பயிற்சியினைப் பெற்று தற்போது வேலை செய்துகொண்டிருப்பவர்களுக்கே வழங்கப்படும்.

அதிபர்,
கிளி/தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
ஏ-9 சாலை, கிளிநொச்சி.

(சி.12828)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

# கிளி. உள்ளூராட்சி திணைக்களம் நடாத்தும் மென்பந்தாட்டப்போட்டி

## நேற்று சிறப்புற ஆரம்பம்


தமிழர் புனர்வாழ்வுக்கழக அணி.


கரைச்சிப் பிரதேச சபை அணி. (படங்கள் : சோதி)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களம் நடாத்தும் அரச, அரச சார்பற்ற நிறுவனக் கழகங்களுக்கிடையிலான 15 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தில் சிறப்புற ஆரம்பமானது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில் கரைச்சிப் பிரதேச சபைக் கழகத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எதிர்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உமாகாந்தின் சிறப்பான துடுப்பாட்டத்தின் காரணமாக 15 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உமாகாந் 98 ஓட்டங்களையும், செல்வராசா 26 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கரைச்சிப் பிரதேச சபைக் கழகம் 13 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதன்ராஜ் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டித் தொடரின் அடுத்த போட்டி நாளை மறுதினம் சுகாதாரத் திணைக்கள அணிக்கும், நீர்ப்பாசனத் திணைக்கள அணிக்குமிடையில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுமென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 13 வயதுப் பிரிவு கடினப் பந்துப் போட்டி இன்று கிளி. பொது மைதானத்தில்

13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கடினப் பந்துப் போட்டி இன்று கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலய 13 வயதுப் பிரிவு அணிக்கும், யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கடினப் பந்துப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இனிங்ஸ் போட்டியாக ஆரம்பமாகும் இப்போட்டியின் பின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டியும் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, 17 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு அணிகளைக் கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலயம் மூன்றாவது அணியாக 13 வயதுப் பிரிவு அணி ஒன்றை மேற்படி போட்டியின் மூலம் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குட்டைப்பாவாடை அணியக்கூடாது: சானியாவிற்கு மிரட்டல்



(கொல்கத்தா)

டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா குட்டைப் பாவாடை அணிந்து விளையாடக்கூடாது என மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து கொல்கத்தா செல்லும் இவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அமெரிக்க டெனிஸ் போட்டியில் நான்காவது சுற்று வரை முன்னேறிய சானியா மிர்சா உலகத் தரவரிசையில் 34ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் வரும் திங்கட்கிழமை கொல்கத்தாவில் தொடங்கவுள்ள டெனிஸ் போட்டியில் இஸ்லாமியப் பரம்பரியத்திற்கு மாறாக உடை அணியக்கூடாதெனவும், இல்லையேல் அவர் விளையாட அனுமதிக்கப்ப மாட்டாரெனவும், இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. இதையடுத்தே கொல்க்த்தா செல்லும் இவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்க முடிவு செய்துள்ளதாக கொல்கத்தா பொலிசார் கூறியுள்ளனர்.




# இந்., சிம்பாப்வே முதல் டெஸ்ட் இந்தியவிற்கு இனிங்ஸ் வெற்றி



(ஹராரே)

சிம்பாப்வே அணிக்கும், இந்திய அணிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இந்திய அணி ஒரு இனிங்ஸ் மற்றும் தொண்நூறு ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

புலவாயோ நகரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்சில் சிம்பாப்வே அணி 279 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை, இந்திய அணி 554 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த முதலாவது இனிங்சில் இந்திய அணியின் சார்பில் வி.வி.எஸ். லக்ஷ்மன் 140 ஓட்டங்களையும், அணித் தலைவர் கங்குலி 101 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தனது இரண்டாவது இனிங்சை தொடர்ந்து விளையாடிய சிம்பாப்வே அணி 185 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த டெஸ்ட் போட்டியின் இர்பான் பதான் அரைச்சதத்தைப் பெற்றதுடன் ஒன்பது விக்கெட்டுக்களையும் கைப்பற்றி இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியா பெற்ற இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் 23ஆம் திகதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் முதல்தர அணியாகத் திகழ கடுமையாக உழைக்க வேண்டும்

## இங்கிலாந்து அணித் தலைவர் வோகன்



தனது அணி உலகத்தில் முதல்தர அணியாக மிளிர மேலும் கடுமையாக உழைக்க வேண்டும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியதால் மட்டும் அணி முதல்தர அணியாக வந்துவிடவில்லை என்று தெரிவித்துள்ள அவர், உலகில் டெஸ்ட் போட்டிகளிலும் ஒரு நாள் போட்டிகளிலும் நன்கு விளையாடி வெல்லும் அவுஸ்திரேலிய அணியே முதல்தர அணி என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

தனது அணி முதல்தரவரிசைக்கு முன்னேற வேண்டுமாயின் 2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆஷஸ் போட்டியிலும் அவுஸ்திரேலியாவை வெல்ல வேண்டும் எனவும், அதற்கு முன்பு இவ்வருட இறுதியில் பாகிஸ்தானில் நடைபெறும் பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் போட்டியிலும் அடுத்த வருட முதற் பகுதியில் இந்தியாவில் நடைபெறும் இந்தியாவுடனான போட்டியிலும் வெற்றிபெற வேண்டும் என்று வோகன் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் குறிப்பிடும் போது தனது அணி அண்மைக்காலமாகத் திறமையாக ஆடிவந்த போதிலும் பலமான பாகிஸ்தான், இந்தியா போன்ற அணிகளுடனான போட்டிகளில் வெல்வது கடினம் என்றார்.

# ஐரோப்பிய கழக அணிகளுடன் அங்கோல அணி பயிற்சிப் போட்டி

2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத்தில் பங்குகொள்ளும் தகுதிகாண் போட்டிகளுக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகளின் சில கழக அணிகளுடன் சிநேகபூர்வ ஆட்டங்களில் அங்கோலா காய்பந்தாட்ட அணி இம்மாத இறுதியில் மோதவிருக்கின்றது.

முதலில் போர்த்துக்கலில் உள்ள லிஸ்பன் கழகம், பென்பிகா கழகம், போர்ட்டோ கழகம் என்பவற்றைச் சேர்ந்த அணிகளுடன் பங்குபற்றவுள்ளது. சர்வதேச அணிகளுடன் மோத முன்பு மேற்குறிப்பிட்ட அணிகளுடன் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தயார்படுத்தப்படுகிறது. போட்டி பற்றிய திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லையாயினும் போர்த்துக்கல் அணிகளுடன் முதன் முதல் மோதவுள்ளன.

இப் போட்டிகளில் வெற்றிபெற்றால் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகளில் றுவாண்டா நாட்டு அணியுடன் வரும் ஒன்பதாம் திகதி மோதும்.

இதற்கிடையில் டோகோ அணி வீரரான றொபர்ட்மாம் பயிற்றுநர் ஸ்டீபன் கெவியுடன் விசாரணைகளில் ஈடுபட்ட பின்னர் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளார். 32 வயதான அவர் பிரான்சில் பிறந்தவராயினும் டோகோ அணிக்காகவே விளையாடுகிறார்.

பிரான்ஸ் உதைபந்தாட்ட சஞ்சிகையிடம் அவர் தெரிவித்ததாவது, தான் மேற்கு ஆபிரிக்க நாட்டுக்காகவே விளையாடவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

டோகோ கொங்கோ அணியுடன் வரும் ஒக்ரோபர் ஒன்பதாம் நாள் தகுதிகாண் போட்டியில் மோதவிருப்பது குறிப்பிடத்தக்கது.


## ஆட்ட நிர்ணய சதிக்கான எந்தவித ஆதாரமும் கிடைப்பது

அண்மையில் சிம்பாப்வேயில் நடைபெற்ற வீடியோ கோன் கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரின் போது ஆட்ட நிர்ணய சதி மேற்கொள்ளப்பட்டதற்கான குற்றச்சாட்டில் எவ்வித ஆதாரங்களும் கிடையாது என சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் மல்கம் ஸ்பிட் தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டை ஊழல் மோசடி பற்றி ஆராயும் குழுவினர் விசாரணை மேற்கொண்டு ஊடகங்களில் வெளியான சம்பவம் பற்றி விரிவாக ஆராய்ந்த போது அதில் எவ்விதமான உண்மையோ ஆதாரங்களோ கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

எவ்வாறயினும் இது போன்ற ஊடகச் செய்திகள் மூலம் எதிர் காலத்தில் சம்பவங்கள் எவ்வாளவு தூரம் உண்மையாக இருக்கும் என்பதை ஆராய முடியுமென குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# ஆஷெஸ் வெற்றியின் எதிரொலி டங்கன் பிளெட்சருக்கு குடியுரிமை



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளரான டங்கன் பிளட்சருக்கு இங்கிலாந்து குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வேயை பிறப்பிடமாகக் கொண்ட பிளட்சர் சுமார் 15 வருடங்களாக மேற்படி குடியுரிமையைப் பெற முயன்றுவந்தார். அண்மையில் 18 வருடங்களின் பின்னர் அவுஸ்திரேலியாவிடம் இருந்து இங்கிலாந்து அணி ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் அவருக்கு குடியுரிமை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர் இரு வருடங்கள் பிரிட்டனுக்கு வெளியில் சுற்றுப்பணம் மேற்கொண்டதால் குடியுரிமை மறுக்கப்பட்டது.

இது பற்றி அவர் குறிப்பிடும் போது ஆஷஸ் கிண்ண வெற்றியை கொண்டாடிக் கொண்டிருக்கும்போது இவ்வாறானதொரு அறிவித்தல் தொலைபேசியில் கிடைக்கப் பெற்றமை இரட்டிப்பு மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ளார் உண்மையில் இந்த சந்தர்ப்பத்தில் இங்கு நிரந்தரமாக வசிப்பது பற்றி தான் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



இன ஒடுக்கு முறையாலும், இராணுவ அடக்கு முறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-09-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## விளைவுகளைக் கவனத்திற் கொண்டு ...!

தேர்தலுக்கு முன்னர் கட்சிகளுக்கு இடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள், தேர்தல் வெற்றியின் பின் அமுலாக்கப்படும் பட்சத்தில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைக் கவனத்தில் கொண்டே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவேண்டும் எனப் பிரதமர் மகிந்தராஜபக்ஷவுடனான உடன்பாடு கை மாற்றப்பட்டதன் பின்னர் தம்மைச் சந்தித்த ஜாதிக ஹெல உறுமய பிக்குகளிடம் மல்வத்த பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடாதிபதியின் அறிவுரைகளானது அவர் இனநெருக்கடியின் தாற்பரியத்தையும் புரிந்துகொண்டுள்ளார் என்றே கொள்ளவைக்கின்றது. அதாவது சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய ஆகியவற்றுடன் செய்து கொண்டுள்ள உடன்பாடுகளின் விளைவுகள் அபாய கரமானவையாக இருக்கும் என அவர் நம்புவதாகவுள்ளது.

ஆனால் மகிந்தராஜபக்ஷவோ இது குறித்து கவலை கொண்டிருப்பதாக இல்லை. இதற்கும் காரணம் இல்லாமலில்லை. அதாவது தேர்தல் கூட்டின் போது கட்சிகளுக்கு இடையில் செய்துகொள்ளப்படும் உடன்பாடுகள், தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் வழங்கப்படும் வாக்குறுதிகள், தேர்தல் பிரச்சாரத்தின்போது வழங்கப்படும் உறுதிமொழிகள் என்பன குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை.

ஏனெனில் தேர்தல் முடிவடைந்ததும், இவ்வாக்குறுதிகளாயினும் சரி செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகளாயினும் சரி கைவிடப்பட்டவையாகிவிடும். ஆகையால் தேர்தலின்போது செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள், வழங்கப்படும் வாக்குறுதிகள் என்பன தேர்தலின் வெற்றியின் பின்னர் மறந்துபோனவையாகி விடுகின்றன.

இதற்காக பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தைப்பற்றி கவலைகொள்ளத் தேவையில்லை என இங்கு கூறவரவில்லை.

ஏனெனில் ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடுகள் தீவிரமடையும் போது இவ்வுடன் பாடுகள் கையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதே கடந்த கால அனுபவமாகும். எடுத்துக்காட்டாக சுனாமிப்பொதுக் கட்டமைப்பு விவகாரத்தின்போது ஜே.வி.பி. எடுத்த நிலைப்பாட்டைக் கொள்ளமுடியும்.

அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் தமக்குமிடையிலான உடன்பாட்டிற்குஏற்ப தமது ஆலோசனைகளின்றியும், தமது ஆட்சேபத்தைப் பொருட்படுத்தாதும் செய்துகொள்ளப்பட்ட பொதுக் கட்டமைப்பு தொடர்பான உடன்பாட்டைக் காரணமாகக்காட்டியே ஜே.வி.பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறியது.

ஆகையினால் முற்றாக இல்லாதுவிடினும் ஆளும் கூட்டணிக்குள் உள்ள கட்சிகள் தமது பலத்தைக்காட்ட விரும்பும் போது உடன் பாட்டுச் சரத்துக்கள் முக்கியத்துவம் பெறுதல் கூடும். இத்தகைய தொரு நிலையில் உடன்பாட்டுவிதிகள் அரசியலில் பாரிய தாக்கத்தை விளைவிப்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

இந்த வகையில், ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய கட்சிகளுடன் தற்போதைய தேர்தல் கூட்டானது நிச்சயமாக யுத்தத்தை நோக்கியே நாட்டைஇட்டுச்செல்லும் என்று பொதுவான அபிப்பிராயமாகவுள்ளது. பிரதமர் தான் யுத்தத்தை விரும்பவில்லை எனக்கூறினும், ஜே.வி.பி.யும், ஹெல உறுமயவும் நாட்டை யுத்தத்தை நோக்கியே இட்டுச்செல்ல விரும்புகின்றன. இதனை தெற்கிலுள்ளவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆகையினால் தற்போதைய பிரதமரின் தேர்தல் உடன்பாடுகளின் அமுலாக்கம் நாட்டை அழிவைநோக்கி இட்டுச்செல்வதாகவே இருக்கும். பிரதமர் மகிந்த ராஜபக்ஷதேர்தலில் வெற்றி பெறின் உடன்பாட்டைப் புறக்கணித்துவிட்டு ஆட்சியைத் தொடர முடியாது. ஏனெனில், அடுத்தடுத்து எதிர்நோக்கும் தேர்தல்களின்போதும் அவருக்கு இவர்களின் கூட்டு அவசியமானதாகவே இருக்கும்.

ஆகையினால் தேர்தல் உடன்பாடுகள் செய்துகொள்ளப்படும் போது அவற்றின் அமுலாக்கத்தின் விளைவுகள் குறித்தும் அக்கறை காட்டவேண்டும். அதாவது நாட்டை அபிவிருத்திசெய்ய முற்படும் எவரும் இக் கரிசனை கொண்டவர்களாகவே இருக்கமுடியும். ஆனால் நாட்டின் அபிவிருத்தியில் அக்கறை காட்டாத தலைவர்களே அதாவது அதிகாரத்திற்காகப் போட்டியிடுபவர்களே உடன்பாடுகளின் விளைவுகள் குறித்து அக்கறை காட்டாது உடன்பாடுகளைச் செய்துகொள்ள முடியும்.

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம்

## தியாகி லெப் கேணல் திலீபன் உண்ணா விரதத்தின் இரண்டாம் நாள் மக்கள் மத்தியில் ஆற்றிய உரை



அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலுவில்லை. இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுயநினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறேன். ஏற்கனவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்து விட்டனர்.

மில்லர் கடைசியாகப் போகும் போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். "நான் எனது தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன் ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலை அடையும் காட்சியை என்னால் காண முடியாமல் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும் எனக் கூறி விட்டு வெடி மருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன் சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதி கோரிய போது "திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன் " எனக் கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர்தான் உங்களுக்கு கிடைத்துள்ளார். நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன் இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய் மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். அதை வானத்திலிருந்து எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனரீதியாக தற்போது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கினேன். விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான உறுதியான இலட்சியத்துடன் இருக்கின்றார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பது எனது இறுதி ஆசை. வணக்கம்

# விளைவுகளை கவனத்திற்கொண்டே ஒப்பந்தங்களை கைச்சாத்திடவேண்டும்

## - கண்டி மல்வத்த பீடாதிபதி ஹெல உறுமயவினருக்கு தெரிவிப்பு

எவரும் எவ்வாறான ஒப்பந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டு கைச்சாத்திடுவதும் பரிமாறிக் கொள்வதும் தவறாகாது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறான உடன் படிக்கைகளையும் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் அதன் நிலை என்னவாகும் என்பதை உணரவும் வேண்டும் என கண்டி மல்வத்தை பௌத்த பீடத்தின் மகா நாயக்க தேரர் திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமயவிற்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான எல்லாவல மேதானந்த தேரர் தலைமையிலான பிரமுகர்கள் கண்டி மல்வத்த பௌத்த பீடத்தின் பீடாதிபதி திப்பட்டுவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்தபோதே மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது இலங்கை நாடு சகல இனங்களுக்கும் பொதுவான நாடு என்பதை உணரவேண்டும். உடன் படிக்கை- இணக்கப்பாடுகளை மேற் கொள்ளும் போது ஏனையோருடனும் கலந்துரையாடி அவர்களுக்கான திட்டங்களையும் வகுத்து அவர்களையும் இணைத்துச் செல்வதே சாலச்சிறந்தது.

அதே போன்று நாட்டிற்கு அனுகூலமாக ஏற்புடைய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அடிப்படை வாதங்களை கவனத்தில் கொள்ளலாகாது. சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் உட்பட அனைத்து இனங்களையும் சார்ந்த மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்துவருகின்றனர். இவ்வனைவரும் அமைதியாக வாழ வேண்டும் என்பதே அனைவரினதும் அபிலாசையாகும்.

தேர்தல் ஒன்றின் போது தேர்தலுக்காக முன்வைக்கப்படுகின்ற உடன்பாடுகள், ஒப்பந்தங்கள், நிபந்தனைகள், தேர்தலின் பின்னர் நிறைவேற்றப்படும் என கட்டாயப் படுத்தப்படும் பட்சத்தில் விளைவு எவ்வாறு அமையும் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும். என்றும் அவர் சுட்டிக் காட்டினார் (32)

# மகிந்தவை சனாதிபதி நீக்கினால் எமது கட்சி வேட்பாளராக நிறுத்துவோம்

## -ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட சந்திரிகா மறுத்தால் ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ நிறுத்தப்படுவார் என்று ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது. கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித்த தேரர் கூறியதாவது:- தலதா மாளிகையில் ஹெல உறுமய தலைவர் எல்லா வெல மேதானந்த தேரருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை சனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவு ஒப்பந்தம் காலை 9.30 மணிக்கு கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல், ஒற்றையாட்சி சிறிலங்கா, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த முன்னர் ஆயுதங்களைக் கையளித்தல் உள்ளிட்ட 12 நிபந்தனைகள் அந்த ஒப்பந்தத்தில் உள்ளன. நியூயோர்க்கிலிருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும், மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சி வேட்பாளராக அறிவித்ததை திரும்பப் பெறக்கூடும். அப்படி நிகழ்ந்தால் ஜே.வி.பியுடன் ஆலோசனை செய்து ஜாதிக ஹெல உறுமய வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிப்போம். அவரது தேர்தல் வெற்றியை எவராலும் தடுத்து விட முடியாது என்றார் ஓமல்பே சோபித்த தேரர்.

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தீங்கள் நியூயோர்க்கில் கூடுகின்றன

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் ஒன்று கூடுகின்றனர். ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சமூகம் உள்ளிட்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கடந்த மே மாதம் ஒன்று கூடின. கண்டியில் இடம்பெற்ற இக் கூட்டத்தின்போது இலங்கைக்கு 31 ஆயிரம் கோடி ரூபா நிதி[illegible] வழங்க தீர்மானிக்கப்பட்டது. [illegible] யோர்க்கில் இடம்பெறவுள்ள இக்கூட்டம் இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் சமாதான நடவடிக்கைகள் என்பனவற்றில் உதவிகள் வழங்கும் நாடுகள் கவனத்தில்கொள்ளுமென எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குருதிக் கொடையாளர்களே உங்கள் தியாகத்தை மதிக்கின்றோம்
இரத்தவங்கி யாழ். போதனா மருத்துவமனை

# பதவி விலகுமுன் சந்திரிகா நோர்வேயை வெளியேற்ற வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

சிறிலங்கா சனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னர் சமாதான நடவடிக்கைகளிலிருந்து நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று சந்திரிகா குமார துங்கவுக்கு ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளைச் சர்வதேச ரீதியில் நோர்வே பாதுகாப்பதாகவும் அவர்களைச் சமாதான நடவடிக்கைகளிலிருந்து நீக்குவதே, ஓய்வு பெறுவதற்கு முன்னர் சந்திரிகா நாட்டிற்காக ஆற்றக் கூடிய மாபெரும் சேவை என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ஒமல்பே சோபித்த தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நோர்வேயைத் தொடர்ந்தும் இந்நாட்டுச் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் முழுப்பொறுப்பையும் சந்திரிகாவே ஏற்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் ஒமல்பே சோபித்த தேரர் கூறியுள்ளார்.

### ஒன்றுகூடவும்

நிரந்தர நியமனம் தொடர்பாக சில விபரங்கள் முல்லை மாவட்ட பட்டதாரி பயிலுநர்களிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளதால் அனைத்துப் பட்டதாரிப் பயிலுநர்களையும் தவறாது இன்று காலை 10 மணிக்கு முல்லை கல்வி வலயத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (08,30)

# யாழ். இல் மந்திரவாதி ஒருவர் மக்களால் விரட்டப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவிலில் தங்கியிருந்து மலையாள மாந்திரீகம் என்ற பெயரில் பல்வேறு மோசடி நடவடிக்கைகளிலும், கலாச்சார சீரழிவான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்த ஒருவர் அடித்து விரட்டப்பட்டுள்ளார்.

இவரது நடவடிக்கை அம்பலமானதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த பொது மக்கள் கொக்குவில் பொற்பதியில் உடையார் ஒழுங்கையில் அவர் தங்கியிருந்த வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதுடன் அந்த நபரையும் அடித்து விரட்டியுள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச் சம்பவத்தில் மேற்படி நபர் தங்கியிருந்த வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி மற்றும் பாவனைப் பொருட்கள் நொருக்கப்பட்டுள்ளதுடன் வீட்டு முற்றத்தில் நின்றிருந்த இரு உந்துருளிகளும், இரு முச்சக்கர வண்டிகளும் எரித்து நாசம் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பொது மக்கள் புகுந்து தாக்குதல் நடத்தியபோது பெண்கள் அணியும் உள்ளாடைகள், சாராயப் போத்தல்கள், மாமிசக் கழிவுகள் வீடியோ பட நாடாக்கள், சில மாத்திரைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் மாந்திரீகம் செய்வதாகக் கூறி மேற்படி நபர் சில பெண்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும், சம்பவ இடத்தில் நின்றிருந்தோர் கூறினார்.

இவரது நாடகம் வெளியானதைத் தொடர்ந்து மேற்படி நபர் யாழ். குடாநாட்டிலிருந்து தலைமறைவாகியுள்ளார். (41,33)

### கடற்படையால்...

வடமராட்சி கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாலேயே இவரை தாம் கைது செய்துள்ளதாக கடற்படையினர் கூறுகின்றனர்.

எனினும் பிரஸ்தாப இளைஞர் படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென அவரது படகைச் சுற்றி வளைத்த படையினர் அவரைக் கைது செய்து சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டோர் கூறினார். (33)

### சமாதான...

தெரிவித்த அவர் பதவியை பிடிப்பதற்காக ஜே.வி.பியுடன் இணைந்து கொள்கைகளை மாற்றியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

### தியாகி...

கிளி. மகாவித்தியாலய மாணவ மாணவிகளின் பேச்சு,கவிதை, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இதேவேளை தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் ஜேர்மன் ஸ்ருகாட் பகுதியில் இன்று நடை பெறவுள்ளது. ஜேர்மன் ஸ்ருகாட் நகரிலுள்ள சிட்டு இசைக் குழுவினரால் குன்சன் நகரத்தில் இசை நிகழ்வும், நடன நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. முல்லை ஜெயராஜ் மற்றும் பலரின் உருவாக்கத்தில் தமிழீழ எழுச்சிப் பாடல்களும் தியாகி திலீபனின் நினைவுப்பாடல்களும் இசை நிகழ்வில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### புலிகள்...

மாலை நான்கு மணிக்கு போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் காரியாலயத்திற்கு சென்ற வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கை தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர், வர்த்தக சங்கங்களின் பிரதி நிதிகள், தேசிய எழுச்சி பேரவையினர் ஆகியோர் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் மாவட்ட தலைவரிடம் மகஜர் கொடுத்து தற்போதைய நிலமைகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர். போர்நிறுத்த உடன்படிக்கை பிரகாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து அரசியல் நடவடிக்கையினை மேற்கொள்ள போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் வழிவகைகளை செய்துகொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுள்ளனர். (21)

### தமிழீழ...

எதுவும் சென்றடையாத நிலையில் இதைச் சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு விடுதலைப் புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு சிறிலங்கா தலைமை நீதிமன்றத்தால் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.இதனால் தமிழர் தாயகப் பகுதிக்கு சர்வதேச நிதி உதவியை நேரடியாக வழங்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளால் விரைவில் கோரிக்கை விடுக்கப்படக் கூடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவித்த புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர்,

ஐக்கிய நாடுகள் சபையை இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளது சரியானது அல்ல. இந்த நடவடிக்கையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனியரசுப் பிரகடனதுக்குத்தான் கண்டிப்பாக உதவக்கூடும். காஷ்மீர் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை இந்தியா விரும்பாதிருப்பது போல் சிறிலங்கா அரசும் இருந்திருக்க வேண்டும் என்றார் அவர்.

# நவம் அறிவுக்கூடத்தில் 'துளிர்' நூல் வெளியீடு

லெப். கேணல் நவம் அறிவுக் கூட போராளிகளினால் உருவாக்கப் பெற்ற "துளிர்" நூல் வெளியீடு 10 - 09-2005 ஆம் நாள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நவம் அறிவுக்கூட அரங்கில் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமான இவ்வெளியீட்டு நிகழ்வு நவம் அறிவுக்கூடப் போராளி நிமலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழத் தேசியக் கொடியினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றிவைத்தார். அடுத்து லெப். கேணல் நவம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றிவைக்க மலர் மாலையினை யாழ். விழிப்புலனற்றோா சங்கத் தலைவர் ஆர். மகேந்திரன் அணிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வில் மாவீரர் வாழ்த்து, தேசியத் தலைவர் வாழ்த்து நிகழ்வுகள் நடைபெற்றன. அடுத்து வரவேற் புரையினை போராளி கவிமதி நிகழ்த்த, வாழ்த்துரையினை இனிய வாழ்வு இல்ல ஆசிரியர் கலைமதி, நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரை யினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார்.

அடுத்து 'துளிர்' மூல நூலினை நவம் அறிவுக்கூட கணினி ஆசிரியர் உமா வெளியீட்டு வைக்க, இனிய வாழ்வு இல்ல இயக்குநர் காந்தி பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் இரவீந்திரன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள், போராளிகள், நவம் அறிவுக்கூடப் போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச்செய்தி கடந்த 12-09-2005 நாள் வெளிவந்த பத்திரிகைச் செய்தியில் ஏற்பட்ட சில தவறுகளை திருத்தி மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

# கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் விசேட மருத்துவ சிகிச்சை

கிளிநொச்சியில் அமைந்திருக்கும் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் டாக்டர் பெஞ்சமின் அவர்களால் இன்று மாலை இரண்டு மணி - நான்கு மணி வரை காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கான சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட வுள்ளதால் பயன்பெற விரும்புவோர் பொன்னம்பலம் மருத்துவமனை கிளிநொச்சி வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். இதேவேளை இங்கு யாழ். போதனா மருத்துவமனையிலிருந்து வருகை தந்திருக்கும் இருதய மருத்துவ நிபுணர் அவர்களால் இருதய நோய்கள், மாரடைப்பு, உயர்குருதியமுக்கம், இருதய மூட்டுவாதம், இருதய கட்டமைப்பில் பாதிப்பு போன்ற வற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட கருவிகளினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது. பயன்பெறவிரும்புவோர் பொன்னம்பலம் மருத்துவமனை கிளிநொச்சி வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

# மாணவியை கடத்திச் செல்ல முயன்ற இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவி ஒருவரை கடத்திச் செல்ல முற்பட்ட இரு இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம்- கொழும்புத் துறைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவ் இரு இளைஞர்களும் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் பயின்று வரும் பிரஸ்தாப மாணவி நேற்றுக் காலை வழமை போல் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சமயம் நகரப் பகுதியில் வைத்து வான் ஒன்றில் வந்த இளைஞர் குழு ஒன்று பிரஸ்தாப மாணவியைக் கடத்திச் சென்றதாகத் தெரிய வருகிறது.

எனினும் மாணவி கடத்தப்பட்டமை தொடர்பாக பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து கொழும்புத் துறையில் மாணவி கடத்திச்செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்த வீடொன்றை சுற்றி வளைத்த பொலிசார் மாணவியை மீட்டதுடன் அவ் வீட்டிலிருந்த இரு இளைஞர்களையும் கைதுசெய்தனர். (33)

### தமிழீழத்தில்...

அவர்கள் அக்கறையோடு இருக்கின்றனர்.

தமிழர்கள் தனித்துவமான சொந்த மொழி, கலாச்சாரம், பண்பாடு, சமயத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்தே அதிகாரங்கள் சிங்களவர்களுக்கு- மேலாதிக்கம்பெற்ற புத்த மதத்தினருக்குரியதாக்கப்பட்டுவிட்டது. இப்போது அவர்கள் 80 விழுக்காட்டினராக அந்நாட்டில் இருக்கிறார்கள். தமிழர்கள் -இந்துக்கள் இருபது விழுக்காட்டினர் வாழ்கின்றனர். கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் இனத்தவரும் அங்கே வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்சிறுபான்மையினரது உரிமைகள் காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வந்தே உள்ளன. அவர்கள் ஒடுக்குமுறைகளுக்கும் அழித்தொழிப்புக்களுக்கும் உள்ளாயினர். தமிழர்கள் தேர்வுகளில் உயர் மதிப்பெண் பெற்றிருந்தாலும் சிங்களவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதியளிக்கப்பட்டது. வேலை வாய்ப்புக்களிலும் திட்டமிட்டு தமிழர்கள் தடுக்கப்பட்டு சிங்களவருக்கே பணிகள் வழங்கப்பட்டன. தமிழர்களது வர்த்தக வாய்ப்புக்களை சிங்களவர்கள் நிராகரித்தனர். தமிழர்கள் மீதான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டே நடத்தப்பட்டதாக கத்தோலிக்கமதகுருமார்கள் என்னிடம் தெரிவித்தனர்.

என்னைச் சந்தித்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் நூறுபக்க அளவிலான அறிக்கை ஒன்றை அளித்தார். அதில் இலங்கையின் வடபகுதியில் தாக்குதலுக்குள்ளான,விமான குண்டு வீச்சுக்களுக்குள்ளான தேவாலயங்கள் பற்றிய விவரங்கள் இருந்தன. 93 தேவாலயங்கள் முழுவதும் சேதமடைந்துள்ளன. 186 தேவாலயங்கள் பகுதியாகவும் 20 தேவாலயங்கள் சிறிய அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகள் அம்மக்களை நம்பிக்கையிழக்க வைத்துள்ளன.

சிறிலங்காவின் பெரும்பான்மை ஆதிக்கமுள்ள அரசாங்கமும் ஊடகங்கள் வாயிலாக சிறுபான்மையினருக்கான எதிரான பிரச்சாரங்களையே உருவாக்கி வருகிறன. இனவெறியையும் அச்சத்தையும் அரசாங்கமே வளர்த்தெடுத்துள்ளது.

அந்நாட்டின் உண்மையான நிகழ்வுகள், உலகத்தின் பார்வையில் மறைக்கப்பட்டுவிட்டன. நான் தமிழீழத்துக்குச் செல் வதைத் தடுக்கின்ற முயற்சிகளையும் சிலர் மேற்கொண்டனர். 'ஏசியன் றியுயூன்'இணையத் தளத்தின் அவுஸ்திரேலிய பிரிவினர், நான் இலங்கைக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் எடுத்துச் செல்வதாக செய்தி பரப்பினார்கள். அது உண்மையாக இருக்குமானால் அவுஸ்திரேலிய அரச சட்டத்தை மீறியதாகவும் என் வாழ்க்கை ஆபத்தை நோக்கியதாக இருந்திருக்கும். இவையெல்லாம் என்னுடைய பயணத்தைத் தடுக்க போடப்பட்ட முட்டுக் கட்டைகள் இவைகள் என்னைப் பாதிக்கவில்லை.

இந்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழர்கள் தங்களுக்கான ஒரு நடைமுறை அரசை இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் உருவாக்கி செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழீழத்தின் நீதித்துறை குறித்தும் நீதிமன்றம், சட்டக்கல்லூரி, காவல்நிலையம், காவல்பயிற்சி மையம், மருத்துவ மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், சிறு தொழிற்சாலைகள், தமிழீழ வைப்பகம்,சிறார் இல்லங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டேன்.

ஆழிப்பேரலையாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட 278 சிறார்கள் அங்கே பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மீளமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறப்பாகச் செய்து வருகிறது. தங்களது செயற்றிட்டங்களுடன் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு அவர்கள் இயங்கி வருகின்றனர். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நோர்வே அனுசரணையோடு யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நோர்வேக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

சிறிலங்கா அரசானது அதிகாரப்பரவலாக்கத்தைச் செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் சுயாட்சியான உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய கூட்டாட்சி முறையாக அது இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழர்கள் தங்களது கலாச்சார, அரசியல், பொருளியல் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தங்களது சொந்தத் தாயகம் என்று ஒரு மனிதன் அழைக்கின்ற பிரதேசத்தில் சமத்துவமாகவும், சமூக நீதியோடும் சுதந்தரமாகவும் வாழ உரிமை உண்டு. அதேபோல் தான் ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் தமிழர்கள் சுய நிர்ணய உரிமை பெற்றவர்களாக சமத்துவமாக வாழுகிற கூட்டாட்சி முறையை ஏற்படுத்த வேண்டும். யுத்தம் இரு தரப்பிலும் பாரிய சேதங்களை உருவாக்கியிருக்கிறது.

தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவை. இலங்கையின் உண்மை நிலைமை அறிய சர்வதேச சமூகமானது சுயாதீனமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். தமிழர் பிரதேசங்களைப் பார்வையிட்டு அங்கே என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர வேண்டும். இதுவே எனது வேண்டுகோளாகும் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.